# மக்கள் விசாரணை ®

லஞ்ச ஊழல் விழிப்புணர்வு

மக்களின் மனக்குமுறல்

ஆண்டு-5 இதழ்-8 ஜனவரி-2017 மாத இதழ் விலை ₹ 10/-

makkalvisaranai@facebook twitter





## இளைஞர்களின் இதயத் துடிப்பு

கவர் ஸ்டோரி

பக்தி, முக்தி மேலும் சக்தியின் உருவம் தான் கோமாதா!



தானத்தில் சிறந்த தானம் பசுவிற்கு செய்யும் அன்னதானம் மட்டுமே!

# தனக்கென வாழாது நமக்கென வாழும் பசுக்களுக்கு புத்தாண்டு, மாட்டுப் பொங்கல், தங்களின் பிறந்த நாள், திருமண நாள், முன்னோர்களின் நினைவு நாள் மற்றும் தாங்கள் விரும்பும் நாட்களில் உணவளித்து மகிழுங்கள்!

கோமாதாவின் பேரருளால் தங்களுக்கும், தங்கள் குடும்பத்தினருக்கும் அனைத்து செல்வங்களும் கிடைத்திட மனதார பிராத்திக்கின்றோம். கடவுளின் படைப்பில் அவனுக்கு நிகரான படைப்பு என்றால், அது பசு மட்டும்தான். நமக்கு எல்லாவிதமான நன்மைகளையும், பயன்களையும் அளிக்கக்கூடிய சக்தி கோமாதாவில் மட்டும்தான் அடங்கி உள்ளது. இப்படி தனக்கென வாழாத பசுக்கள் இரக்கமின்றி கொல்லப்படுவதை தடுக்க காஞ்சி மகாப் பெரியவா ஆசியோடு பசுமடம் என்ற காப்பகத்தை ஏற்படுத்தி கடந்த 18 ஆண்டுகளாக 120 பசுக்களுக்கு மேல் பராமரித்து வருகிறோம். கோயில்கள் மற்றும் மாட்டுச் சந்தைகளில் ஏலம் விடப்படும் வயதான பசுக்களை பெற்றும், கசாப்புக் கடைகளுக்கு செல்லும் பசுக்களை வாங்கியும் பராமரித்து வருகிறோம். இப்பசுக்களைப் பாதுகாக்க புத்தாண்டு, பொங்கல் மற்றும் தாங்கள் விரும்பும் நாட்களில் தங்களால் முடிந்த நன்கொடைகளை தீவனம், பராமரிப்பு மற்றும் மருத்துவ செலவிற்கு வழங்கி, இப்புனிதப் பணியான கோ-சேவையில் தங்களையும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுகிறோம். தாங்கள் கோமாதாவிற்கு செய்யும் சேவை தங்களின் மாத்ரு, பித்ருக்களுக்கு செய்யும் சேவையாகும். பசுமடத்தை பார்வையிட்ட பின்னும் நீங்கள் உதவி செய்யலாம். பசுக்களை இறுதி காலம் வரை நிம்மதியாகவும், சுகமாகவும் வாழ வைப்பதும், பசுவதையை தடுத்து நிறுத்துவதும், மேலும், பசு வளர்ப்பின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுமே எங்களின் முக்கிய நோக்கமாகும். பசுமடத்தில் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமையன்று 108 பசுக்களுக்கு பாராயணத்துடன் கோபூஜை வெகு சிறப்பாக நடைபெறுகிறது.

## பசுமடத்தில் உள்ள வயதான, ஆதரவற்ற, ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பாதுகாத்து பராமரிக்க...

ஒரு பசுவை பராமரிக்க ஒரு வாரத்திற்கு ரூ.200 அனுப்புவோருக்கு கோபூஜை செய்த கோமாதா யந்திரம் அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க ஒரு மாதத்திற்கு ரூ.650 அனுப்புவோருக்கு பித்தளையிலான பெருமாள் விளக்கு அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க இரண்டு மாதத்திற்கு ரூ.1,200 அனுப்புவோருக்கு பித்தளையிலான லெட்சுமி குபேர விளக்கு அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை பராமரிக்க ஆறு மாதத்திற்கு ரூ.3,750 அனுப்புவோருக்கு வெள்ளியிலான ஸ்ரீஅன்னபூரணி விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் வெல்லம் செலவு ரூ.500 அனுப்புவோருக்கு பித்தளையிலான அஷ்டலெக்ஷ்மி விளக்கு அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் புல் செலவு ரூ.800 அனுப்புவோருக்கு பித்தளையிலான சிவன்-பார்வதி விளக்கு அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் வைக்கோல் செலவு ரூ.1,250 அனுப்புவோருக்கு பித்தளையிலான ஸ்ரீஅன்னபூரணி விக்ரஹம், யந்திரம் அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு நாள் தீவனச் செலவு ரூ.2,600 அனுப்புவோருக்கு வெள்ளியிலான கோமாதா விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு மாத மருத்துவச் செலவு ரூ.2,900 அனுப்புவோருக்கு வெள்ளியிலான துளசி மாடம் அனுப்பி வைக்கப்படும்
அனைத்து பசுக்களுக்கும் ஒரு மாத அகத்தி கீரை செலவு ரூ.4,300 அனுப்புவோருக்கு வெள்ளியிலான தவழும் கண்ணன் அனுப்பி வைக்கப்படும்
ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரிக்க ரூ.6,600 அனுப்புவோருக்கு ஒரிஜினல் வலம்புரி சங்கு அனுப்பி வைக்கப்படும்

## குடும்பம் வாழையடி வாழையாக மகத்தான செல்வச் செழிப்புடனும், மகிழ்ச்சியுடனும் திகழ கோதானம் செய்வீர்!



பசுமடத்தில் நடைபெறும் கோதானம்

தாங்கள் விரும்பும் நாட்களில் நாட்டுப் பசுவும் கன்றும் கோதானம் செய்ய ரூ. 12,500/-. கோதானம் செய்தால்... ஜாதக ரீதியான தோஷம், செய்வினை தோஷம், பித்ரு தோஷம், திருஷ்டி தோஷம், பூர்வ ஜென்ம தோஷம், களத்திர தோஷம், பிரம்மஹத்தி தோஷம், நாகதோஷம் போன்ற 16 வகை தோஷங்கள் முற்றிலும் விலகும். மேலும் தீர்க்க சுமங்கலி பாக்கியம் கிடைக்கவும், கணவன்-மனைவி ஒற்றுமை நிலைக்கவும், புத்ர பாக்கியம் உண்டாகவும், தெய்வீக சக்திகள் பாதுகாப்புடன் சுகப்பிரசவம் நடைபெறவும், தடைப்பட்ட திருமணம் கைகூடவும் கோதானம் செய்வீர். கோதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான சிவன் பார்வதி விளக்கும், பித்தளையிலான கோமாதா மற்றும் மதுரா கிருஷ்ணர் விக்ரஹமும் அனுப்பி வைக்கப்படும்.



பசுமடத்தில் நடைபெறும் ரிஷபதானம்

## அனைத்து துன்பங்களும், துயரங்களும் நீங்கி நீண்ட ஆயுள் பெற காளைகன்று தானம் (ரிஷபதானம்) செய்வீர்!

தாங்கள் விரும்பும் நாட்களில் காளைகன்று தானம் (ரிஷபதானம்) செய்ய ரூ. 5,000/-. ரிஷபதானம் செய்தால்... அனைத்து தடைகளும் நீங்கி பெரும் நஷ்டங்கள் மற்றும் சங்கடங்கள் விலகும், வியாபார தடைகள் அகல, வாகன விபத்தை தவிர்க்க, தடை இன்றி தன வரவு மற்றும் காரிய வெற்றி பெற, தோல்விகள் அகல வெற்றிகள் குவிய, ராஜயோகம் அடைய, கற்ற கல்வியும் தேடிய செல்வமும் என்றும் நிலைத்திருக்க காளைகன்று தானம் செய்வீர். ரிஷபதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான காமதேனு விக்ரஹம் அனுப்பி வைக்கப்படும்.

## மாட்டுத் தொழுவத்தில் நடைபெறும் நமது கஷ்டங்களை போக்கி இஷ்டங்களை கொடுக்கும் தேவதைகள் குடிகொள்ளும் கோடி தீப ஆராதனை



மாட்டுத்தொழுவத்தில் நடைபெறும் கோடி தீப ஆராதனை

தங்களது இல்லங்களில் அமைதியும் ஆனந்தமும் நல்வாழ்வும், முன்னோர்கள், குல தெய்வ ஆசி வேண்டியும் மாட்டுத் தொழுவத்தில் கோடி தீபங்கள் ஏற்றி வழிபாடு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தங்களின் முன்னோர்கள் நினைவாக அல்லது தங்களின் பிரார்த்தனைக்கேற்ப தாங்கள் விரும்பும் தேதியில் பசுமடத்தில் உள்ள மாட்டுத் தொழுவத்தில் கோமாதாவிடம் பிரார்த்தனை செய்து தேவதைகள் குடிகொள்ளும் தீபம் தீப ஸ்தம்பத்தின் மீது ஏற்றப்படும். ஒரு நாள் தீபம் ஏற்றி வழிபட ரூ. 300 அனுப்புபவர்களுக்கு பித்தளையிலான பசுவும் கன்றும் உள்ள விளக்கும், பிரசாதமும் அனுப்பி வைக்கப்படும். இதில் அனைவரும் கலந்து கொண்டு வாழ்வில் ஒளி பெறுவோம்.



## குடும்ப சந்தோஷத்தின் திறவுகோலான வலம்புரி சங்கு அதிர்ஷ்டத்தை உண்டாக்கி வாழ்வை வளமாக்கும். மன இருளையும் வாழ்க்கை இருளையும் அகற்றி தங்கள் வாழ்வை பிரகாசமாக்கி சீரும் சிறப்புமாய் வாழவைப்பதும் வலம்புரி சங்கே!

வாழ்வில் நல்ல துணையை பெறவும், பிரிந்தவர்கள் ஒன்று சேரவும், மாணவர்களின் கல்வியறிவு பெருகவும், அடிக்கடி வரும் நோய்களை தடுக்கவும், வீடு மற்றும் வியாபார ஸ்தலத்தில் கண் திஷ்டி நீங்கவும், வாடிக்கையாளர்களை ஈர்க்கும் சக்தி கிடைக்கவும், ரியல் எஸ்டேட் மற்றும் பங்கு வியாபாரத்தில் யோகம் பெறவும், சொந்த வீடு வாங்கவும், பூர்வீக சொத்துக்கள் நிலைக்கவும், வாஸ்து குறைகள் நீங்கவும், கடன் பிரச்சனைகள் தீரவும், குடிப்பழக்கம், தீயபழக்கம், தீயசக்தியை நெருங்க விடாமல் தடுக்கவும் ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து பராமரிக்க ரூ.6,600 அனுப்புவோருக்கு பசுவிற்கு அபிஷேகம் செய்யப்பட்ட மனக்கவலை மாற்றும் ஒரிஜினல் வலம்புரி சங்கு ஒன்று அனுப்பி வைக்கப்படும்.

தாங்கள் விரும்பும் நாட்களில் தங்கள் சார்பாக கோபூஜை, கோதானம், சங்கு பூஜை, தீப ஆராதனை செய்து தங்கள் சார்பாக அனைத்து பசுக்களுக்கும் அன்னதானம் வழங்கப்படும்

**நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் ஒரு வருடத்திற்கான ரூ.365 ஐ கோமாதாவின் பராமரிப்பிற்கு அனுப்பும் அன்பர்களுக்கு வெள்ளியிலான கோமாதா டாலர் மற்றும் கோமாதாவின் வண்ணப்படம் அனுப்பி வைக்கப்படும்**

பசுவின் ஆகாரத்திற்கும், கோதானத்திற்கும், கோடி தீப ஆராதனைக்கும், வலம்புரி சங்கிற்கும் நன்கொடையை CHEQUE/DD/MO ஆக SHRI GHOSALA SEVA TRUST, CHENNAI என்ற பெயரில், கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பும் போது தங்களின் பெயர், கோத்திரம், நட்சத்திரம், முகவரி, தொலைபேசி எண்ணை தெளிவாக குறிப்பிட வேண்டுகிறோம். நன்கொடை அனுப்புவோருக்கு பிரசாதங்களும், பூஜிக்கப்பட்ட மேற்கண்ட பொருட்களும் மற்றும் சுத்தமான நாட்டு பசுஞ்சாணத்தில் சைவ முறைப்படி பசுமடத்தில் விராஜ ஹோமம் செய்து தயாரிக்கப்பட்ட விபூதியும் அனுப்பி வைக்கப்படும்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வரி விலக்கு உண்டு

# பசுமடம்

(RECOGNISED BY ANIMAL WELFARE BOARD OF INDIA)

வயதான, ஊனமுற்ற, நோயுற்ற, ஆதரவற்ற பசுக்களை சுதந்திரமாக பாதுகாத்து பராமரிக்கும் இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு (PO), சென்னை-77.

OFF: 8754 555 555, MADAM: 8754 666 666 | www.shrigosala.com



பசு மடத்தில் உள்ள வயதான பசுக்கள்

சிறப்புத் தலையங்கம்

# சரியில்லாத கடந்த ஆண்டு

2016ம் ஆண்டு கடந்து சென்றுவிட்டது. 2017 பிறந்துவிட்டது. புதிய ஆண்டு பிறந்தது நல்ல செய்திதான், ஆனால், கடந்த ஆண்டில் மக்கள் சந்தித்த பிரச்னைகள் ஏற்பட்ட துன்பங்கள் கடந்து சென்று விட்டனவா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். நாடு, கிராமங்களில் வாழ்கிறது.

கிராமங்கள் முன்னேறினால்தான் நாடு முன்னேறும் என்று மகாத்மா காந்தி உறுதி படச் சொன்னார். ஆனால், அந்த கிராமங்களில் விவசாயம் கருகிவிட்டது. தமிழ்நாட்டில் தங்களது இன்னுயிரை துறந்த விவசாயிகள் 70 பேர் என்றால், துன்பத்தின் தாக்கத்தை புரிந்து கொள்ளலாம். அரசு எந்த நிவாரண நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது. வார்தா புயல் தனது கைவரிசையை சென்னையில் காட்டிவிட்டு சென்றது. பசுமையான மரங்கள் முறிந்தன. புதிய மரக் கன்றுகளை புத்தாண்டில் நட்டு, நிழலை பெருக்க வேண்டும்.

இதேபோல் கடந்த ஆண்டில் நாடாளுமன்றம், சட்டமன்றத்தின் செயல்பாடுகள் நம்பிக்கை அளிக்கும் வகையில் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகளின் ஒவ்வொரு கேள்விக்கும் ஆட்சியாளர்கள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். இதற்கான களமாகத்தான் நாடாளுமன்றம், சட்டமன்றங்கள் உள்ளன. ஆனால், ஆட்சி முறையில் வெளிப்படைத் தன்மை இல்லை. விளைவு நாடாளுமன்றம் முற்றிலும் முடக்கம். மக்கள் வரிப்பணத்தை வீணாக்குவதற்கு நமக்கு என்ன உரிமை உள்ளது என்ற எண்ணத்தை மனதில் இருத்தி செயல்பட்டால் போதும் எல்லாம் நல்லபடியாகவே நடக்கும்.

சட்ட மன்றத்தை எடுத்துக் கொண்டால், கடந்த ஆண்டில் தமிழக சட்டசபையின் செயல்பாடு சரியில்லை என்ற குற்றச்சாட்டுதான் உள்ளது. முக்கிய பிரச்னைகளை விவாதிக்க வேண்டிய தருணத்தில்கூட சட்டசபை கூட்டப்படவில்லை. ஆட்சியாளர்களின் விருப்பத்திற்கு ஏற்ப நடக்கும் கூட்டமாகத்தான் உள்ளது. சட்டமன்ற குழுக்கள் அமைக்கப்படவில்லை. இதற்காக நீதிமன்றத்தை நாடும் நிலைதான் உள்ளது. மாநிலம் வறட்சியின் பிடியில் உள்ளது. கல்வி கொள்கையில் மத்திய அரசின் தலையீடு காரணமாக மாநிலத்தில் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கும் வகையில் உள்ளது. தேசிய அளவில் போட்டித் தேர்வுகளை எதிர்க் கொள்ளும் வகையில் மாணவர்களை தயார்படுத்த பள்ளிக் கல்வி மற்றும் கல்லூரிக் கல்வியை மேம்படுத்த வேண்டும்.

இதற்கு ஆக்கப்பூர்வமான வழிகாட்டியாளர்களையும் தொலைநோக்கு சிந்தனையாளர்களையும் பல்கலை. துணைவேந்தர்களாக நியமிக்க வேண்டும். கடந்த காலங்களில் நியமிக்கப்பட்ட துணைவேந்தர்களின் செயல்பாடுகள் விமர்சனத்திற்கு உள்ளாகி சந்தி சிரிக்கிறது. பிரதமர் மோடி அறிவித்த உயர் மதிப்பு ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற திட்டத்தால் கடந்த 50 நாட்களாக நாடு முழுவதும் மக்கள் பட்டபாட்டை உலகமே அறியும். இந்த நிதி பிரச்னை இந்த ஆண்டும் நீடிக்கக்கூடாது என்பதே எதிர்பார்ப்பு.

ஒட்டுமொத்தமாக பார்த்தால், கடந்த ஆண்டு பிரச்னைகள் நிறைந்த ஆண்டாக இருந்து கடந்து சென்றுள்ளது. புதிய ஆண்டில் வளம் பெருக வேண்டும். மக்கள் நலம் பெருக வேண்டும். அமைதி, இன்பம் நிலைக்க வேண்டும். இந்த எதிர் பார்ப்புகள் எல்லாம் பிறந்த 2017ல் நிறைவேறும் என்ற நம்பிக்கை உள்ளது. மக்களோடு மக்களாக நாமும் நம்புவோம்.

– ஆசிரியர்




# திருவண்ணாமலை அரசு மருத்துவ மனையில் தொடரும் அவலம்




தமிழகத்தில் 9 மாவட்டங்களில் உள்ள அரசு பொது மருத்துவமனைகளில் மொத்தம் உள்ள 1128 மருத்துவர் பணியிடங்களில் 301 பணியிடங்கள் நீண்ட நாட்களாக நிரப்பப்படாமல் இருப்பதாக கூறப்படுகிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 64 பணியிடங்கள், திண்டுக்கல் 51, திருநெல்வேலி 45, விருதுநகர் 45, சிவகங்கை 40 என காலியாக இருக்கிற அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் 160 மருத்துவர் பணியிடங்களில் 94 பேர் மட்டுமே பணியில் இருக்கிறார்கள். இங்கு 982 படுக்கை வசதிகள் உள்ள மருத்துவமனையில் 21 லட்சம் புற நோயாளிகளுக்கும், 6,500 பிரசவங்களுக்கும் ஆண்டுதோறும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் கணக்கற்ற மருத்துவர்களின் பணியிடங்கள் காலியாக இருக்கிற காரணத்தால் மக்கள் அனுபவிக்கிற தொல்லைகளுக்கு அளவே இல்லாத நிலை உள்ளது. அது மட்டுமல்லாமல் அனுபவம் வாய்ந்த மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் நெடுஞ்சாலைகளில் ஏற்படுகிற விபத்துகளில் இருந்து பொது மக்களை காப்பாற்ற முடியாமல் பலர் இறக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டு வருகிறது.

கிராமப் புறங்களில் வாழ்கிற மக்களுக்கு மாவட்ட தலை நகரங்களில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் பல்வேறு வசதி குறைவு காரணமாக குழந்தைகள் இறப்பு விகிதம் தமிழகத்தில் அதிகரித்து வருகிறது.

சமீபத்தில் தருமபுரியில் ஒரே நேரத்தில் 11 குழந்தைகள் இறக்க வேண்டிய சோக நிகழ்வு ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து விழுப்புரத்திலும் இத்தகைய குழந்தை இறப்புகள் ஏற்பட்டதை எவரும் மறந்துவிட முடியாது.

திருவண்ணாமலை அரசு மருத்துவமனையும் படு மோசமாக இருக்கிறது. இதற்கு அடிப்படை காரணம் போதிய செவிலியர்கள் இல்லாதது, பிராணவாயு தட்டுப்பாடு, நவீன உபகரணங்கள், அனுபவம் வாய்ந்த மருத்துவர்கள் இல்லாதது தான். ஒரு அரசு மருத்துவ மனையில் 8 மணி நேர பணிக்கு 26 செவிலியர்கள் இருக்க வேண்டும். ஆனால் தருமபுரியில் குழந்தைகள் இறக்கும் போது 4 செவிலியர்கள் மட்டுமே இருந்ததாக கூறப்படுகிறது. இதிலிருந்து தமிழக அரசு பாடம் பெற்றதாக தெரியவில்லை. தொடர்ந்து அதே அவல நிலை நீடித்து வருகிறது.



நோயாளிகளுக்கான வழிகாட்டு மையமின்றி, அவர்கள் அலைய வைக்கப்படுகின்றனர். நோயாளிகளுக்கு நோயின் தன்மையும் விளக்கப்படுவதில்லை. வீல்சேர் மற்றும் ஸ்ட்ரெச்

சர்கள் ஆகியவை போதிய அளவில் இல்லை. மின்தூக்கிகள் பெரும்பாலும் செயல்படுவதில்லை. இதனால் வயதானவர்கள், நடக்க முடியாத நோயாளிகளை, அவர்களது உறவினர்கள் தோளில் சுமந்தோ, தூக்கியோ செல்ல வேண்டியிருக்கிறது.

எக்ஸ்ரே, எம்.ஆர்.ஐ. ஸ்கேன் இயந்திரங்கள் அடிக்கடி பழுது ஏற்பட்டு, பெரும்பாலான நேரங்களில் மூடியே வைக்கப்படுகின்றன.

சோதனை முடிவுகள் உடனடியாக வழங்கப்படுவதில்லை. இதனால் சிகிச்சை துவங்க தாமதமாகி, நோய் பாதிப்பு கடுமையாகிறது.

போதிய அளவில் படுக்கை வசதி இல்லாததால், பல்வேறு சமயங்களில் நோயாளிகள் துண்டை விரித்துத் தரையில் படுக்க வேண்டியிருக்கிறது.

நாய், எலி, பாம்பு, கொசு மற்றும் பல்வேறு வகையான பூச்சிகளின் புகலிடமாக மருத்துவமனைகள் விளங்குகின்றன.

ஸ்ட்ரெச்சர், வீல்சேர் தள்ளுபவர் துவங்கி, மருத்துவமனையின் அத்துணை பிரிவு ஊழியர்களிடமும் ரூ 50 முதல் ரூ 500 வரை இலஞ்சமாக நோயாளிகளின் உறவினர்கள் அழ வேண்டியிருக்கிறது. அறுவை சிகிச்சைக்கு சில ஆயிரம் ரூபாய்கள் வரை பறிக்கப்படுகிறது.

புறநோயாளிகளுக்கு சிகிச்சை வழங்க காலை 8 மணிக்கு வர வேண்டிய மருத்துவர்களுள் பலர் 11 மணிக்கு வந்து 12 மணிக்குக் கிளம்பி, தங்களது கிளினிக்குக்குப் போய்விடுகின்றனர்.

மருந்து வழங்கும் பிரிவில் சாதாரண நோய்களுக்கு வழங்கும் மருந்துகள் மட்டுமே தாராளமாகக் கிடைக்கிறது. ஆனால், இதய நோய், தோல் நோய் உள்ளிட்ட சிறப்பு சிகிச்சைக்கான மாத்திரைகள் கிடைப்பதில் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது.

முக்கிய மருந்துகள் மட்டுமல்லாது, கையுறை வரை வாங்கிவர வெளி மருந்துக் கடைகளுக்கு டாக்டர்கள் சீட்டு எழுதித் தந்து அனுப்புகின்றனர். வார்டுகளுக்கு வந்து டாக்டர்கள், நோயாளிகளைச் சந்தித்து மருந்துகள் ஆர்டர் எடுத்துச் செல்லும் புரோக்கர்கள் அதிகரித்துள்ளனர். மருத்துவமனைக்குள் போலீசு நிலையம் இருந்தும் குழந்தைகள் கடத்தப்படுவதும், வார்டுகளில் பொருட்களும் பணமும் திருடப்படுவதும் நடந்து வருகின்றன.



## தாய்மையை வர்த்தகமயமாக்கிய தனியார்மயம்

"பெண் என்ன பிள்ளை பெறும் இயந்திரமா?" எனக் கேட்டார் பெரியார். "ஆம்" என்கிறார்கள் நவீன மருத்துவர்கள்.

குழந்தையின்மை ஒரு தனிநபரின் பிரச்சினையல்ல. இன்னும் சரியாகச் சொன்னால் அது பிரச்சினையே அல்ல. அதை ஒரு பிரச்சினையாகப் பார்ப்பது பெண்களுக்கு எதிரான சமூக அமைப்பே.

சமூகத்தின் இந்தச் சாபக்கேட்டை தமக்கான வர்த்தகமாக மாற்றிக் கொண்டார்கள் மருத்துவர்கள். குழந்தையின்மை என்பதை பெரிய அவமானகரமான பிரச்சினையாக இன்னும் பெரிதுபடுத்தியதில் மலட்டுத்தன்மையைப் போக்கும் மகப்பேறு மருத்துவத்திற்கு மிக முக்கிய இடமுண்டு.

குழந்தை 'பாக்கியம்' இல்லாதவர்களுக்கு குழந்தை பெற்றுத் தருவதற்காக, இந்தியாவில் வாடகைத் தாய்மார்கள் உருவாகி வருகிறார்கள். அவர்கள் பத்து மாதம் சுமந்து பெற்றுத் தந்தால் கணிசமான பணம் தரப்படுகிறது.

ஆம், தாய்மை ஒரு தொழிலாக மாற்றப்பட்டிருக்கிறது. வாடகைத் தாய்மார்களுக்கு சொற்பமான பணத்தைத்தூக்கிப் போட்டுவிட்டு, பெரும் பணத்தை இடைத்தரகர்களாகச் செயல்படும் மருத்துவர்கள் சுருட்டிக் கொள்கிறார்கள்.

அதேசமயம், மிக வறுமையான குடும்பத்தில் ஒரு பெண்ணுக்கு குழந்தையில்லை என்றால், அதற்குத் தீர்வு காண்பதற்கு மகப்பேறு மருத்துவத்தில் தீர்வு இல்லை. காரணம், அந்த ஏழைப் பெண்ணிடம் பணம் இல்லை என்பதுதான்.

– வெங்கடேசன்



# தரைவாழ் தொல் பழங்குடி இருளர் வாழ்வுரிமை மாநாடு – 2016



கடந்த 18–12–2016 அன்று செஞ்சியில் தரைவாழ் தொல் பழங்குடியினர் வாழ் வுரிமை மாநாடு டாக்டர் சுடரொளி சுந்தரம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. மாநாட் டில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒரு மனதான நிறைவேற்றப்பட்டன.

**மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

1) தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் 8 லட்சம் பழங்குடியினரில் சரி பாதிக்குமேல் பண்டைய பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். அதிலும் குறிப்பாக 2 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் தரைப்பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் வாழ்வாதாரம் மிகவும் கேள்விக்குறியாக உள்ளது. இவர்கள் குழந்தைகளின் கல்வி உரிமை என்பது முற்றாக புறக்கணிக்கப்படுகின்றது. ஏனெனில் இவர்களுக்கு சாதிச்சான்று கிடைப்பது என்பது பெரும் பிரச்சயையாக உள்ளது.

எனவே தொல் பழங்குடி மக்களுக்கு 15 நாட்களில் தாசிதாரே சாதிச்சான்று வழங்க வேண்டும் என் இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

மேலும் மற்ற சமூகத்தைச் சேர்ந்த மாணவர் களுக்கு தாங்கள் பயிலும் பள்ளியிலேயே சாதிச்சான்று வழங்கப்படுவதைப் போல் இருளர் மாணவர்களுக்கும் வழங்க வேண்டும் என்றும் இம்மாநாட்டின் வாயிலாக தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கின்றோம்.

2) பழங்குடி மக்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் 7 சதம் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

3) தமிழ்நாட்டில் பழங்குடிகளின் நிலை மையை எடுத்துச் சொல்லி அவர்களுக்கு ஒதுக் கப்படும் நிதி சரியான முறையில் பயன்படு வதற்கு ஏதுவாக பழங்குடியினர் நல ஆலோசனை குழு (State Tribal Advisory Council) ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை கண்காணித்து நடைமுறைப்படுத்த தொல் பழங்குடிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்புக்குழு நியமிக்கவும் தமிழ்நாடு அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

4) தொல் பழங்குடிகளான 6 இனக்குழுக் களுக்கும் Tribal Sub Plan நிதி மூலம் ஒதுக்கப் படும் நிதி எந்தவித இடையூறும் இல்லாமல் அம்மக்களை சென்றடைய அரசு ஆவண செய்ய வேண்டும்.

5) தமிழ்நாட்டில் வசிக்கும் பழங்குடி

மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு ஏதுவாக தரைப் பகுதியில் ஆஸ்டல் களை நிறுவி மாணவர்களின் கல்விக்கு உத்தரவாதப்படுத்த வேண்டும்.


டாக்டர் சுடரொளி சுந்தரம்

6) தமிழ்நாட்டில் அனைத்து சமூகங்களுக்கும் பயன்படும் வகையில் அமைச்சகம் உள்ளது. அதைப்போலவே கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரத் தில் மிகவும் பின் தங்கியுள்ள பழங்குடி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தனி அமைச்சகம் உருவாக்க வேண்டும் என இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

7) பழங்குடி மக்கள் தங்கள் பாரம்பரிய மூலி கை வைத்தியத்தில் கைர்ந்தேர்ந்தவர்கள். ஆனால் அந்த வைத்தியம் அரசால் அங்கீகசப்படுவதில்லை. எனவே அரசே முன்வந்து மூலிகைப் பண்ணை களை உருவாக்கி அதில் வைத்தியம் செய்யும் பழங்குடி மக்களை பயிற்றுவித்து மூலிகை வைத்தியத்தை அங்கீகரிக்க வேண்டும். இதற்கு காடுகளைப் பயன்படுத்த அரசு உதவ வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

8) பழங்குடி பெண்கள் மீது நடைபெறும் பாலியல் வன்கொடுமைகளை தடுப்பதோடு பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தகுந்த பாது காப்பும் பாதிப்பை உண்டாக்கும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9) பழங்குடி மக்களுக்கு வீடு கட்டிக்கொள்ள பழங்குடியினர் துணைத் திட்டத்தின் குறைந்த பட்சம் 5 லட்சம் நிதி வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

10) பழங்குடி மக்களின் மேம்பாட்டிற்கு உதவும் வகையில் தாட்கோ நிதி உதவி வழங்கி னாலும் வங்கிகள் கடன் கொடுக்க மறுப்ப தோடு, பழங்குடி மக்களை கேவலமாக நடத்து கின்ற போக்கை இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. எனவே இந்த மாதிரி நடவடிக் கைகளை தவிர்த்து நேரடியாக பழங்குடி மக் களுக்கு தொழில்முனைவோரை ஊக்கப்படுத்தும் வகையில் பழங்குடியினர் நிதி மேம்பாட்டுக்கு கழகம் உருவாக்கி அதன் மூலம் பயன்பெற வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறது.

11) தமிழ்நாட்டில் 236 சட்ட மன்ற தொகுதி களின் எண்ணிக்கை அப்படியே இருக்கும்போது பழங்குடியினருக்கு இருந்த சட்ட மன்ற தொகுதி மட்டும் எப்படி காணாமல் போனது என்று தெரியவில்லை. எனவே பழங்குடி மக்களின் அரசியல் பங்கேற்பை சரியாக உறுதி செய்து அவர்களுக்கு 6 சட்ட மன்ற தொகுதிகளை 3 தொகுதிகளை மலைப்பில்ரதேசங்களிலும் 3 தொகுதி களை தரைப்பகுதிகளிலும் உருவாக்க அரசு முயற்சி செய்ய வேண்டும்.

12) உள்ளாட்சி மன்றத் தேர்தலில் கிராம வார்டு ஒன்றியங்கள், நகராட்சி, மாநகராட்சி உட்பட அனைத்து நிலைகளிலும் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மாநிலம் முழுதும் இட ஒதுக்கீட்டின் அடிப்படை யில் சமச்சீராக இடங்கள் வழங்கப்பட வேண்டும்.

13) தமிழ்நாட்டில் பழங்குடி மக்களுக்கு ஒரு பாராளுமன்ற தொகுதியை ஒதுக்க மத்திய, மாநில அரசுகள் ஆண செய்ய வேண்டும்.

14) 2006 வன உரிமை அங்கீகார சட்டப்படி தரையில் வாழும் தொல பழங்குடி மக்களுக்கு உதவும் வகையில் தரையில் உள்ள காடுகளை பயன்படுத்த ஏதுவாக திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்.

15) நீர்நிலைகளின் அருகே குடிசைபோட்டு வாழ்ந்து வரும் பழங்குடி மக்களை அங்கிருந்து வெளியேற்றுவதில் முனைப்புடன் செய்ல்படும் அரசு அதிகாரிகள், அவர்களுக்கு உரிய இடத்தில் குடியமர்த்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

16. சமீப காலமாக தமிழ்நாட்டில் கொத் தடிமை முறை மேலோங்கியுள்ளது. குறிப்பாக செங்கல் சூளைகளில் பழங்குடி இருளர்கள் தங்கள் குழந்தைகளோடு பணியாற்ற வேண்டிய நிலையில் உள்ளனர். செங்கல் சூளைகளில் அவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு, உரிய உணவுப் பொருள்கள், மருத்துவ வசதி எதுவும் இன்றி ஒவ்வொரு ஆண்டும் பாலியல் வன்கொடுமை, கடன் தொல்லைகளால் இருளர் மக்கள் துன்பப் படுகின்றனர்.

எனவே அரசு இவர்களின் கோரிக்கைகள் மீது தேவையான கவனம் செலுத்தி அவர்களை கொத்தடிமை முறையில் இருந்து மீட்டெடுத்து அவர்களின் மறு வாழ்விற்கும் தொழில் செய்வதற் கும் வங்கிகளில் நிபந்தனை இன்றி 50 சதமான த்தில் கடன் வழங்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இம்மநாட்டின் மூலம் தெரிவித்தார்கள். எனவே இப்பிரச்சனை களுக்கு தீர்வுகான மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்குமா?

– செஞ்சி சரவணன்



# அரசியல் நாகரீகம் தமிழகத்தில் இல்லை!

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் திமுக தலைவர் கருணாநிதியை அதிமுகவின் முன்னணித் தலைவர்களான தம்பி துரையும் ஜெயக்குமாரும் நேரில் சென்று நலன் விசாரித்த செய்தி பேசுபொருளாக மாறியிருக்கிறது. தமிழகத்தில் அரசியல் நாகரிகம் அரும்பத் தொடங்கியிருப்பதாகச் சிலர் சொல்கிறார்கள். ஆனால் உண்மை அதுவன்று.

அடிப்படையில் ராஜாஜியும் பெரியாரும் இருவேறு துருவங்கள். ஆத்திகம்தான் ராஜாஜியின் சுவாசம்; பெரியாருக்கோ பகுத்தறிவுதான் பிரதானம். ஆனால், சித்தாந்தப் பின்புலங்களைத் தாண்டி இருவருமே அணுக்க நண்பர்கள். தன்னுடைய தனி வாழ்க்கை தொடர்பான அதிமுக்கிய முடிவான மணியம்மையை மணம் செய்துகொள்ளும் முடிவு குறித்து ராஜாஜியிடம் கலந்து பேசியவர் பெரியார். அப்போது தான் கொடுத்த யோசனை என்ன என்பதைக் கடைசி வரை ராஜாஜி பகிரங்கப்படுத்தவில்லை. அவர்களுக்கு இடையிலான நட்பு அந்த அளவுக்கு நாகரிகம் தோய்ந்தது. கொள்கை எதிரியாக இருந்தபோதும் ராஜாஜி மறைந்தபோது, அவரது இறுதிப் பயணத்தில் வாய்விட்டு அழுதபடியே சென்றார் பெரியார்.

திமுக ஆட்சியின்போது இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தினார் முதல்வர் அண்ணா. அப்போது திமுகவின் பிரதான அரசியல் எதிரி காங்கிரஸ். ஆனாலும், அந்த மாநாட்டில் முன்னாள் முதல்வர்கள் ராஜாஜி,



காமராஜர், பக்தவத்சலம் மூவருக்கும் தரப்பட்ட மரியாதையும் கௌரவமும் ஆரோக்கிய அரசியலின் அடையாளங்கள். மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்தியவர் காமராஜர்; மாநாட்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கம்பரின் சிலையைத் திறந்தவர் பக்தவத்சலம்; மாநாட்டின் கலைப் பொருட்காட்சியைத் திறந்தவர் ராஜாஜி.

முதல்வர் கருணாநிதி தனது மகன் ஸ்டாலின் திருமணத்துக்கு வருமாறு காமராஜருக்கு அழைப்பு விடுத்தார். அப்போது காமராஜருக்கு உடல்நிலை சரியில்லை. ஆனாலும், காமராஜரின் வருகை அவசியம் என்று கருதிய கருணாநிதி,

அண்ணா சாலையில் உள்ள உம்மிடி பத்மாவதி திருமண அரங்கில், மணமக்கள் அமரும் மேடை வரைக்கும் கார் வருவதற்குத் தோதாகச் சிறப்பு வழி ஏற்பாடு செய்தார். அதனை ஏற்று, காரிலேயே மேடைவரை வந்து மணமக்களை வாழ்த்திப் பேசினார் காமராஜர்.

எண்பதுகளின் மத்தியில் எம்ஜிஆர் உடல் நிலை பாதிக்கப்பட்டு, அமெரிக்காவில் சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்த தருணத்தில், "நானும் பிரார்த்தனை செய்கிறேன்" என்ற தலைப்பில் கருணாநிதி எழுதிய உருக்கமான கடிதம் முக்கிய மானது. மேடைகளில் அதிமுகவும் திமுகவும் அமிலம் சுரக்கும் வார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டிருந்த காலகட்டத்தில், எம்ஜிஆரின் உடல்நிலை பற்றி திமுகவினர் யாரும் மேடை களில் பேசக் கூடாது என்று கருணாநிதி உத்தர விட்டிருக்கிறார். எம்ஜிஆர் மரணம் அடைந்த போது அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காகத் தனது சுற்றுப்பயணத்தைப் பாதியில் ரத்து செய்துவிட்டு வந்தார் கருணாநிதி. அப்போது திமுக சார்பில் நடக்கவிருந்த அனைத்து நிகழ்ச்சி களும் ஒரு வார காலத்துக்கு ரத்து செய்யப்பட்டன.

மேற்கண்ட நிகழ்வுகளின் பொருள், தமிழ் நாட்டில் உள்ள அரசியல் தலைவர்கள் அத்தனை பேரும் அன்பின் வடிவமாக, ஒரு தாய் மக்களாக, அரசியல் நாகரிகத்தின் நாடு போற்றும் அடை யாளங்களாக மட்டுமே இருந்தனர் என்பதல்ல. அரசியல் விமர்சனங்கள் இருக்கவே செய்தன. கண்டனக் கணைகளைப் பரஸ்பரம் பொழிந்து கொள்ளவே செய்தனர். ஆனாலும், அவர்களுக்கு இடையிலான தனிப்பட்ட உறவுகளில் பெரிய



சிக்கல்களையோ, உரசல்களையோ ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

ஆனால், எண்பதுகளின் இறுதியில் தமிழ் நாட்டு அரசியல் களம் கருணாநிதிக்கும் ஜெயலலிதாவுக்குமாக மாறியபோது, மேற்கண்ட அடிப்படைகள் ஆட்டம் காணத் தொடங்கின. அரசியல் எதிரிகளாக இருக்க வேண்டியவர்கள் தனிப்பட்ட எதிரிகளாக இயங்க ஆரம்பித்தனர். பொதுவான விழாக்களிலோ, தனிப்பட்ட நிகழ்வுகளிலோ கருணாநிதியும் ஜெயலலிதாவும் பரஸ்பரம் பங்கேற்பதோ, சந்தித்துக்கொள்வதோ கிடையாது. பொது நிகழ்ச்சியில் சந்திப்பதுகூட அந்தத் தலைவர்களின் பிரத்யேக விருப்பம், தனி உரிமை என்று தவிர்த்துவிடலாம்.

ஆனால், கட்டாயம் பங்கேற்க வேண்டிய சட்டமன்றத்தில் கூட ஜெயலலிதாவும் கருணா நிதியும் சந்தித்துக்கொள்வதை இருவருமே தவிர்த்துவிட்டார்கள். விதிவிலக்காக, திமுக சார்பில் சுனாமி நிவாரண நிதியைத் தருவதற்காக அப்போதைய முதல்வர் ஜெயலலிதாவை








ஸ்டாலின் நேரில் சந்தித்ததையும் அப்போது கருணாநிதியின் உடல்நலன் குறித்து ஜெயலலிதா விசாரித்ததையும் சொல்லலாம். மற்றபடி, தமிழக அரசியல் களத்தில், குறிப்பாக, அதிமுக - திமுக தலைவர்கள் மத்தியில் பரஸ்பர உறவு நாகரிகம் பலவீனமாக இருக்கிறது என்பது உண்மைதான்.

என்றாலும், சமீபத்திய தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, இரு தரப்பிலும் சிறுசிறு மாற்றங்கள் தென்படுகின்றன. பதவியேற்பு விழாவில் இருக்கை ஒதுக்கீடு தொடர்பான சர்ச்சையில் முதல்வர் வெளியிட்ட அறிக்கை, எதிரிக் கட்சியாக அல்லாமல் எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம் என்று ஸ்டாலின் சொன்னது ஆகியன வெகுவாக வரவேற்கப்பட்டன.

முதல்வர் ஜெயலலிதா உடல்நிலை பாதிக்கப்பட்டிருக்கும் சூழலில், 'அவர்மீது கொள்கை அளவில் நான் வேறுபட்டாலும், அவர்கள் விரைவில் உடல்நலம் பெற்று, பணியினைத் தொடர வேண்டுமென்று வாழ்த்துகிறேன்' என்று திமுக தலைவர் கருணாநிதி வாழ்த்துச் செய்தி வெளியிட்டதும், அதைத் தொடர்ந்து ஸ்டாலின் மருத்துவமனைக்குச் சென்று ஜெயலலிதாவின் உடல்நலன் குறித்து விசாரித்ததும் அடுத்தடுத்து நடந்தன. உச்சபட்சமாக, முதல்வர் ஜெயலலிதாவின் இறுதி அஞ்சலி நிகழ்வில் ஸ்டாலின் பங்கேற்றார். தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் கருணாநிதியை அதிமுக தலைவர்கள் சந்தித்ததும் நலன் விசாரித்து வாழ்த்து சொன்னதும் நடந்தேறியிருக்கின்றன.

ஆக, தமிழகத்தில் மீண்டும் பழைய அரசியல் நாகரிகம் தழைக்கிறது என்று தாராளமாகச் சொல்லலாம். ஆனால், இப்போதுதான் அப்படியொரு நாகரிகம் தொடங்குகிறது என்பது போன்ற பேச்சு உண்மையானதல்ல. இந்தக் கலாச்சாரம் மேன்மேலும் தழைத்தோங்குவது அரசியலை மேலும் மேன்மையானதாக்கும் என்பதோடு மாநிலத்தின் நலனுக்கும் வழிவகுக்கும்!

– குருதேவ்


வாழ்க தமிழ்! வளர்க அன்பு!!

மக்கள் விசாரணை

Applied in NEWS PAPER ASSOCIATION OF INDIA

லஞ்ச ஊழல் விழிப்புணர்வு

ஆண்டு-5 ஜனவரி-2017 இதழ் - 8

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் (பி) லிட்., சார்பாக
வெளியிடுபவர் ஆசிரியர்
A. மவுரியன், B.A.,Dip. Journilisam,

• ஆசிரியர் குழு
A. காதர் மொய்தீன், ஆ.தே. முருகையன்,
காசி. அரங்கநாதன்

• துணை ஆசிரியர்கள்
ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார்,
M. தரணி. எஸ். சரவணன், பி. மாரிமுத்து, D. ரவி,
V. அருணாச்சலம், வீ. வடிவேல், வீரஆறுமுகம்,
A. பாலசந்தர், காஞ்சிபுரம் எஸ். கோபி, கோவை சத்தியராஜ்

• முதன்மை செய்தியாளர்கள்
சமயசெல்வம், மதுரை ராம்குமார், பிரகாஷ், பிரதீப், சேலம்
பாலகிருஷ்ணன், செந்தில்குமார், மனோஜ்குமார், கோவை
R. ஜெயா, K. ஷமீம் ஷகிலா, P. சாந்தா, தென்சென்னை
பி.கே.தனஞ்செயன், தி.மலை
அ.மு.ரமணாத்திரி, மார்கபந்து, தி.மலை
யு. அக்ரம்கான், சுக்கூர்கான், கிருஷ்ணகிரி
பா. சுப்பிரமணியன், திருநெல்வேலி நாகராஜ், மூணாறு
மாரிமுத்து, உளுந்தூர்பேட்டை சுசீ ஈஸ்வர், தென்காசி
ராமசுப்பிரமணியன், ராஜபாளையம் சிலம்பரசன், தர்மபுரி
செந்தில், தென்சென்னை சத்தியராஜ், நாமக்கல்

• நிருபர்கள்
எம். நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, ராஜேஷ்
அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின், பார்த்திபன்,
தேவராஜ், வெங்கடேசன், விஜய்

• சட்ட ஆலோசகர்கள்
V.K. சக்திகுமார், B.A.,B.L., High Court (Notary)
T.S. சங்கர், M.B.A.,L.L.B.,

• புகைப்பட நிருபர் : எம். சந்தோஷ்சிவன்

• இதழ் வடிவமைப்பு : AKS CREATIVE'S



அலுவலகம் :

மக்கள் விசாரணை

நெ.21/12, 2-வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி,
ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001.
Email : mavreyan@gmail.com www. makkalvisaranai.com
Information Contact : feedback@makkalvisaranai.com
Phone : 044 - 4354 2611, 93821 33334



Press & Registration of Book Act-in ன்படி
செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார்.
எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள
நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.



பணமதிப்பு நீக்க அறிவிப்பு வந்து 50 நாட்கள் நெருங்கி விட்டன. பிரதமர் மோடி 50 நாட்கள் மக்கள் பொறுத்திருக்க வேண்டும் என்று கூறினார். அதைக் கிட்டத்தட்ட நெருங்கி விட்டோம். ஆனால் மக்கள் ஏடிஎம் மையங் களில் நிற்பது இன்னும் குறைந்தப்பாடில்லை. மக்களிடம் சகஜமாக பணம் இன்னும் புழங்க வில்லை என்பதே நிதர்சனமாக இருக்கிறது.

இந்தத் திட்டத்தை அறிவித்ததற்கு பிரதமர் மோடி மூன்று காரணங்களை தெரிவித்தார்.

# மக்கள் படும் துயரமும் கறுப்புப் பண ஒழிப்பும்?

கறுப்புப் பணத்தை ஒழிப்பது, கள்ள நோட்டு புழக்கத்தை தடுப்பது, தீவிரவாத நிதியை ஒழிப்பது என்ற மூன்று காரணங்களைத் தெரிவித்தார். இந்த மூன்று காரணங்களையும் இந்த திட்டம் பூர்த்தி செய்யுமா என்பது மிகப் பெரிய கேள்வியாக இருக்கிறது. ஆனால் இந்த அறிவிப்பு வந்த சில நாட்களிலேயே மத்திய அரசு இந்த காரணங்களை தவிர்த்துவிட்டு இந்த அறிவிப்பின் முக்கிய நோக்கம் பணமில்லா பொருளாதாரத்தை நோக்கிச் செல்வது என்று கூறியது. பணமில்லா பொருளாதாரத்தை நோக் கிச்செல்வதற்குஇவ்வளவுபெரியசுமைதேவையா என்று கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.

பணமில்லா பொருளாதாரத்துக்கு இப்போது தான் நாம் தயாராகிவருகிறோமா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். ஏழு வருடத் திற்கு முன்பே பணமில்லா பொருளாதாரத் திற்கான விதை விதைக்கப்பட்டு விட்டது. நம்முடைய பணமில்லா



பொருளாதாரத்தை நோக்கிய நகர்வு ஆதாரில் ஆரம்பிக்கிறது. ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு 2010-ம் ஆண்டு ஆதார் மசோதாவை இரு அவைகளிலும் நிறைவேற்றியது. இதுவரை 108,95,44,612 ஆதார் கார்டுகள் வழங்கப்பட் டுள்ளன.

2014-ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ஆதார் மசோதாவை திருத்தம் செய்து வெளியிட்டது. இந்த மசோதா வின் கீழ் அனைத்து மானியங்களும் சேவைகளும் ஆதார் கார்டு வழியாக நேரடியாக வங்கி கணக்குக்கு வழங்க திட்டமிட்டு கொண்டுவரப் பட்டது. சமையல் எரிவாயு மானியம் இதன் மூலமே வழங்கப்பட்டு வருகிறது.

அடுத்ததாக ஜன் தன் யோஜனா திட்டம். வங்கி கணக்கு அல்லாத அனைவரையும் வங்கி அமைப்புக்குள் கொண்டு வரும் திட்டம். கிட் டத்தட்ட 25 கோடி ஜன் தன் வங்கி கணக்குகள் இதுவரை தொடங்கப்பட்டுள்ளன. இதில் பல்வேறு குறைபாடுகள் இருந்தாலும் நிறைய வங்கி கணக்குகள் இயங்காமல் இருந்தாலும் இது மிகப் பெரிய முயற்சி என்பதில் சந்தேக மில்லை.

அதுமட்டுமல்லாமல் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் பணிபுரிபவர்களும் வங்கி கணக்கு மூலமாகவே பணத்தை எடுத்து வருகின்றனர்.

யுபிஐ எனப்படும் ஒருங்கிணைந்த பண பரிவர்த்தனை முறையை மத்திய அரசு நிறுவனமான நேஷனல் பேமென்ட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா கொண்டுவந்துள்ளது. இதன் மூலம் பணப் பரிவர்த்தனையை செய்வது போல் உருவாக்கப்பட்டுள்ளது. யுபிஐ இண்டர்பேஸ் வடிவமைப்பு எளிதாக இல்லை என்பது போன்ற குற்றச்சாட்டுகளும் எழுகின்றன. ஆனால் பணமில்லா பொருளாதாரத்தை நோக்கி நகர்வதில் இது மிகப் பெரிய முயற்சியாக பார்க்கப்படுகிறது.





இப்படி கடந்த ஏழு வருடங்களாக ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசும் இந்தியாவில் பணமில்லா பொருளாதாரத்தை நோக்கி நம்மை நகர்த்தி வருகின்றன. இது இயல்பான மாற்றமாகவும் இருந்து வருகிறது.

இந்த மூன்று திட்டங்கள் மீது பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும் இது மக்களிடையே வெகுவாக சென்று சேர்ந்துள்ளது. ஆனால் தற்போது பணமதிப்பு நீக்க அறிவிப்புக்கு பின் பணமில்லா பொருளாதாரத்துக்கு அனைத்து மக்களும் செல்ல வேண்டும் என்று மத்திய அரசு நிர்பந்தம் கொடுக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது.

கடந்த ஏழு வருடமாக செய்து வரும் மாற்றத்தை இரண்டு மாதங்களில் செய்ய முடியாது என்பதை அரசு விளங்கி கொள்ள வேண்டும். அதுமட்டுமல்லாமல் இந்தியா முழுவதும் பணமில்லா பொருளாதாரத்திற்கு உடனடியாக செல்வதற்குரிய உள்கட்டமைப்பு வசதிகள் இல்லை என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

உதாரணமாக இந்தியாவில் 24 கோடி பேர் மட்டுமே ஸ்மார்ட்போன்களை உபயோகிக்கின்றனர். மீதம் பேரிடம் ஸ்மார்ட் போன் சென்றடையவில்லை. அதேபோல் இணையதள வசதியும் கிராமங்களை சென்றடையவில்லை. இப்படி இருக்கையில் யுபிஐ மாதிரியான பயன்பாடு எப்படி மக்களை சென்றடையும். மேலும் இந்தியாவில் வங்கிக் கிளைகள் குறைவு. 1 லட்சம் மக்கள் தொகைக்கு குறைவான வங்கிக் கிளைகளே உள்ளன. ஏடிஎம் மையங்களும் குறைவாக உள்ளன. இதனால் மக்கள் பணப் பரிவர்த்தனைகளை மேற்கொள்வது கடினமாக இருந்து வருகிறது.

இதுபோன்ற உள்கட்டமைப்பு குறைபாடுகள் நிறைய உள்ளன. இவற்றை அரசு களைய வேண்டும். உதாரணமாக மைக்ரோ ஏடிஎம் மையங்களை கிராமங்கள் தோறும் அமைக்க வேண்டும். மொபைல் வங்கி கிளைகளை கிராமங்களுக்கு செல்ல வேண்டும். பாயிண்ட் ஆப் சேல் இயந்திரங்களை வர்த்தகர்களுக்கு விலை குறைவாகவும் கட்டணம் இல்லாமலும் வழங்க வேண்டும். மேலும் செயலி போன்ற செயல்பாடுகளை ஊக்கப்படுத்தும் அதே சமயத்தில்சாதாரண போன்களிலும் இந்தப் பயன்பாடுகளை எவ்வாறு ஏற்படுத்தலாம் என்பதை யோசிக்க வேண்டும்.

இந்தியாவின் சைபர் பாதுகாப்பு மிக மோசமான நிலையில் உள்ளது. சமீபத்தில்தான் இந்திய வங்கிக் கணக்கு பற்றிய விவரங்கள் திருடப்பட்டு பல கோடிகளை மக்கள் இழந்தனர். தற்போது லெஜியான் என்ற தகவல்திருடுபவர்கள் பல்வேறு ட்விட்டர் கணக்கு விவரங்களை திருடியுள்ளனர். பணமில்லா பொருளாதாரத்தை ஊக்கப்படுத்த பல்வேறு திட்டங்களை முன்னெடுக்கும் அதே நேரத்தில் இந்தியாவின் சைபர் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

மக்கள் பணமில்லா பொருளாதாரத்தை நோக்கி தொடர்ந்து முன்னேறி கொண்டுதான் இருக்கிறார் கள். டிஜிட்டல் யுகத்தில் பணமில்லா பொருளா தாரம் தவிர்க்க முடியாதது. மக்கள் ஏற்கெனவே பணப்புழக்கம் இல்லாமல் தவித்துவரும் சூழ்நிலையில் ஓரிரு மாதங்களில் அனைவரும் பணமில்லா பொருளாதாரத்துக்கு மாற வேண்டும் என்று நிர்பந்திப்பதால் அரசு எதையும் சாதித்துவிடமுடியாது. ஒவ்வொரு கட்டமாக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தினால் மட்டுமே அடுத்த சில வருடங்களில் பணமில்லா பொருளாதாரத்தை நோக்கிய நகர்வு வெற்றிபெறும். இல்லையென்றால் திட்டம் காணலாகிவிடும். – **அகிலாண்டேஸ்வரி**



# இளைஞர்களின் இதயத் துடிப்பு

ஒருநாள் போட்டி மற்றும் டி20 கிரிக்கெட் போட்டிகளுக்கான இந்திய அணியின் கேப்டன் பதவியிலிருந்து விலகுவதாக மஹேந்திர சிங் தோனி அறிவித்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் டி20 கிரிக்கெட் தொடர்களில் விளையாட வுள்ள இந்திய அணி அறிவிக்கப்படவுள்ள நிலையில், தோனி இந்த அதிரடி முடிவை எடுத் துள்ளார். கேப்டன் பதவியிலிருந்து விலகினா லும், இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் டி20 தொடர்களில் விளையாடுவதற்கு தோனி தயாராக இருக்கிறார் என பிசிசிஐ வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட் போட்டியிலிருந்து 2014 டிசம்பரில் தோனி ஓய்வு பெற்றார். அவருடைய தலைமையில் இந்தியா 27 வெற்றி, 18 தோல்விகளை சந்தித்துள்ளது. 15 போட்டிகள் டிராவில் முடிந்துள்ளன.

இந்திய டெஸ்ட் அணிக்கு தலைமை வகித்து வரும் விராட் கோலி, ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளின் கேப்டன் பொறுப்பையும் ஏற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த உலகக்கோப்பை வரை விளையாட தோனி விருப்பம் தெரிவித்துள்ளதால், அது கோலிக்கு மேலும் ஒரு வலுவான இந்திய அணியை உருவாக்கப் பயனளிக்கும். இன்னமும் கடைசி ஓவர்களில் வேகமாக ரன்களைக் குவிக்கும் வீரரை இந்திய அணி கண்டடை யவில்லை. இதனால் தோனியின் தேவை அணிக்கு அவசியமாக உள்ளது.

டெஸ்ட் கிரிக்கெட்டில் ஒரு கேப்டனாகவும் தன்னை வலுவாக நிரூபித்துள்ளார் விராட் கோலி. அதன் அடிப்படையில், இப்போது ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளிலும் சாதித்துக்காட்ட ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது.

இந்த வருடம் சாம்பியன்ஸ் டிராபி, 2018-ல் டி20 உலகக்கோப்பை, 2019-ல் ஒருநாள் உலகக்கோப்பை, 2020-ல் டி20 உலகக்கோப்பை என அடுத்த மூன்று வருடங்களில் நான்கு முக்கியமான போட்டிகள் உள்ளன.

**இந்திய அணிக்குத் தலைமையேற்று, அணியை வெற்றியுடன் வழிநடத்துகிற பெருமைமிக்க கேப்டன் பொறுப்பு கோலி கையில் வழங்கப்பட்டது. இந்திய கிரிக்கெட்டும் கேப்டன் தோனி அல்லாத அடுத்தக் கட்டத்துக்கு நகர்கிறது.**

- ஆ. மவுரியன்



ஆ. மவுரியன்

புதிய தொடர்

## தமிழ் மண்ணின் வீர வரலாறு

# மாவீரன் மருதநாயகம்

வரலாற்றின் பக்கங்களில் புழுதி படிவதும், காலம் அதனை துடைத்து மானுடத்தின் பார்வைக்கு கொண்டு வருவதும் எப்போதும் நிகழக்கூடியதாகவே இருக்கிறது.

1997ல் கலைஞானி என திரையுலகம் வர்ணிக்கும் பிரபல நடிகர் கமல்ஹாசன் மிகப் பெரிய வரலாற்று படத்தை எடுக்கப் போவதாக அறிவித்தார்.

அப்படத்தின் தொடக்க விழாவுக்கு இங்கிலாந்து ராணி எலிசபெத் சிறப்பு விருந்தினராக வருகை தந்தார். அன்றும் முதல்வராக இருந்த கலைஞர் மூப்பனார் உள்ளிட்ட புகழ் பெற்றவர்கள் எல்லாம் கலந்து கொண்டதால் அப்படம் மிகப் பெரிய எதிர்பார்ப்பை பெற்றது.

படத்திற்குப் பெயர் மருதநாயகம்! படமோ நிஜத்தில் நடந்த வரலாறை பின்னணியாகக் கொண்டது. திரையுலகில் வாழக்கையை தொலைக்கும் தமிழகம், இதை பரபரப்பாக விவாதித்தது. யார் அந்த மருத நாயகம்? அவரது போராட்ட வரலாறு என்ன? இந்த கேள்விகள் பலரையும் உசுப்பியது போல் தமிழக முஸ்லிம்களையும் உசுப்பியது.

காரணம், அவர் ஒரு முஸ்லிம். ஆங்கிலேயரை எதிர்த்த விடுதலைப் போராட்ட வீரன்! அடங்க மறுத்த வீரத் தமிழன்! அப்படி பல செய்திகள் கொஞ்சம், கொஞ்சமாய் வெளிவந்தது.

கட்டபொம்மனை போற்றியவர்கள், மருதநாயகத்தை மறந்து விட்டார்கள். ஐந்தாம் வகுப்பு பாடப் புத்தகத்தில் கூட அவரது வரலாறு இல்லை. ஒரு நடிகர் அதை படமாக எடுக்காவிட்டால், அவரது வரலாறு வெளியே தெரிந்திருக்காது என்பது தான் உண்மை. கசப்பான உண்மை!

இனி கான்சாஹிப் மருதநாயகத்தோடு பயணிப்போம்! நீண்டதொரு வரலாறு பொருமையுடன் அறிந்து கொள்வோம்..

### ஊரும், பெயரும்

மருதநாயகத்தின் வாழ்க்கை வரலாறு மிகவும் பரபரப்பானது. இவர் பூலித்தேவன் மற்றும் திப்பு சுல்தானின் தந்தை ஹைதர் அலியின் சம காலத்தவர். இவர் பிறந்த ஆண்டு பற்றி துல்லியமாக தெரியாவிடினும்,

பிரபல தமிழக வரலாற்று ஆய்வாளர் செ. திவான் அவர்கள் கி.பி. 1720க்கும், 1730க்கும் இடையில் பிறந்திருக்கலாம் என கணிக்கிறார்.

இராமநாதபுரம் மாவட்டம் பனையூரில், இந்து வேளாளர் குடும்பத்தில் பிறந்ததாகவும், பின்னாளில் இஸ்லாத்தைத் தழுவியதாகவும் வரலாற்றுக் குறிப்புகள் உள்ளன. மதுரை பகுதியை ஆண்டதால் மருதநாயகம் என்று பெயர் பெற்றதாக கூறப்படுகிறது.

இஸ்லாத்தை ஏற்ற காரணத்தினால் முகம்மது யூசுப்கான் சாஹிப் என்று தன் பெயரை மாற்றிக் கொண்டதாகவும் கூறப்படுகிறது. இவர் மருதுநாயகம், கான்சாஹிப், மருதநாயகம் முகம்மது கான் சாஹிப் என பல பெயர்களில் குறிப்பிடப்படுகிறார்.

இவர் பிறவி முஸ்லிம். இதை நாட்டுப்புற பாடல்கள் உறுதிப்படுத்துகின்றன என்று பேரா. நத்தர் ஷா தனது ஆய்வு நூலில் வாதிடுகிறார்.

1764ல் வெள்ளைய அதிகாரி ஒருவர் எழுதிய கடிதம் ஒன்று அதற்கு ஆதாரமாக மேற்கோள் காட்டப்படுகிறது.

## வளரும் பயிறும், துடிப்பான தொடக்கமும்

சிறுவராக இருக்கும்போதே கம்பீரமாக தன் வாழ்நாளைத் தொடங்கினார் கான் சாஹிப். விளையாட்டாக இருந்தாலும், வீரதீர சாகஸங்களாக இருந்தாலும் கான் சாஹிப் தான் அதில் வெற்றி பெறுவார்.

மருத்துவர், தையல் தொழிலாளி, படகோட்டி, விளையாட்டு வீரர், வித்தகர் என பல திற மைகள் வெளிப்பட்டாலும் தன்னை போர்க் களத்தில் ஈடு படுத்திக் கொள்வதிலேயே அவரது ஆர்வம் இருந்தது.

தஞ்சாவூரை தலைமையகமாகக் கொண்டு ஆட்சிபுரிந்த மராட்டிய மன்னன் பிரதாப சிம்ஹானின் படையில் கொஞ்ச காலம் பணிபுரிந்தார். இதுதான் முதல் ராணுவ அனுபவம்!

## பிரெஞ்சுப் படையின் ஆயுதம்

பிறகு என்ன காரணத்தினாலோ அவர் புதுச்சேரிக்குச் சென்றார். சென்றவர் அங்கேயும் போர் புலியாகவே தன்னை அடையாளம் காட்டினார். புதுச்சேரியை மையமாகக் கொண்டு ஆட்சி புரிந்த பிரெஞ்சுப் படையில் சாதாரண படைவீரனாக தன்னை இணைத்துக் கொண்டார்.

இவரது அறிவும், தலைமைப் பண்பும், போர் நுட்பமும் பிரெஞ்சு தளபதிகளை வியப்பில் ஆழ்த்திற்று. விளைவு, குறுகிய காலத்தில் முக்கியப் பதவிகளை வென்றார் கான்சாஹிப் மருதநாயகம்.

## ஆற்காடு நவாப்

ஔரங்கசீப் மறைவுக்குப் பின்னர் பலமிழந்த முகலாய பேரரசு, தென்னிந்தியாவில் சிதறியதால், கர்நாடக நவாப், ஐதராபாத் நிஜாம், ஆற்காடு நவாப் போன்ற பெயர்களில் ஆங்காங்கே சிற்றரசுகள் தோன்றின.

அப்போது ஆற்காடு நவாபாக முடிசூடிக் கொள்வது யார் என்ற போட்டி எழுந்தது. ஒரே ரத்த உறவுகளை சேர்ந்த சாந்தா சாஹிபும், முகம்மது அலியும் தங்களுக்குள் மோதினர்.

சமயம் பார்த்து காத்துக் கொண்டிருந்த ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் அது வசதியாய் போயிற்று. சாந்தா சாஹிபுக்கு பிரெஞ்சுக் காரர்களும், முகம்மது அலிக்கு ஆங்கிலேயர்களும் ஆதரவளித்தனர்.

இதன் நோக்கம், ஆதிக்க போட்டியும், போரின் வெற்றிக்கு பிந்தைய வணிக நோக்கமும்தான். இன்று அன்னிய நிறுவனங்களான கோகோ கோலாவும், பெப்ஸியும் ஆளுக்கொரு அரசியல் கட்சிக்கும் அல்லது பெரிய கட்சிகளுக்கும் நன்கொடை கொடுத்து, தங்கள் வியாபார நலன்களை பாதுகாத்துக் கொள்கிறார்கள் அல்லவா- அதுபோல்தான் அன்றும் இருந்தது.-

**– தொடரும்**


# இவள் ஒரு சமூகத்தின் கண்ணாடி!

பாலிவுட்டின் மூன்று கான்களில் ஆமிர் கானின் திரைப்படத்துக்கு எப்போதும் கூடுதல் எதிர்பார்ப்பு இருக்கும். அர்த்தமுள்ள, முற்போக்கான படைப்பைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக ஆமிர் எடுத்துக்கொள்ளும் மெனக்கெடல்தான் அதற்குக் காரணம். அந்த வரிசையில், 'பிகே'வுக்குப் பிறகு ஆமிரின் நடிப்பில் வெளியாகியிருக்கிறது 'தங்கல்' திரைப்படம். நித்தேஷ் திவாரி இயக்கியிருக்கும் இந்தப் படம் மல்யுத்த வீரர் மஹாவீர் சிங் போகாட்டின் வாழ்க்கையைப் பின்தொடர்கிறது.

ஹரியாணா மாநிலத்தில் ஒரு கிராமத்தில் வசிக்கும் மல்யுத்த வீரர் மஹாவீர் சிங் (ஆமிர் கான்). அவருடைய மனைவி தயா (சாக்ஷி தன்வர்). மஹாவீருக்கு மல்யுத்தப் போட்டியில் இந்தியாவுக்காகத் தங்கப் பதக்கம் வெல்ல வேண்டுமென்பது கனவு. ஆனால், அவருக்கு அடுத்தடுத்துப் பெண்களே பிறப்பதால் அந்தக் கனவை ஓரங்கட்டிவைக்கிறார்.

ஆனால், தன்னுடைய சண்டையிடும் திறன் தன் மகள்கள் கீதாவுக்கும் (ஜாய்ரா வசீம் / ஃபாத்திமா சனா ஷேக்), பபிதாவுக்கும் (சுஹானி பட்நாகர் / சன்யா மல்ஹோத்ரா) இயல்பாக இருப்பதைத் தற்செயலாக உணரும் மஹாவீருக்கு மீண்டும் அந்தக் கனவின் மீதான நம்பிக்கைத் துளிர்விடுகிறது. கிராமத்தினரின் ஏளனப் பேச்சுகளையும் பார்வைகளையும் புறந்தள்ளி அவர் தன் மகள்களுக்கு மல்யுத்தப் பயிற்சி கொடுக்கிறார். மஹாவீரின் தங்கப் பதக்கக் கனவு அவருடைய மகள்களால் எப்படி நனவாகிறது என்பதுதான் 'தங்கல்'.

விளையாட்டு வீரர் ஒருவரின் வாழ்க்கையை நேர்மையாகவும் எளிமையாகவும் பதிவுசெய்திருக்கிறது இந்தப் படம். இந்த நேர்மைக்காக இயக்குநர் நித்தேஷ் திவாரியைப் பாராட்டலாம். பெண் சிசுக் கொலைகளும், குழந்தைத் திருமணங்களும் சர்வசாதாரணமாக நடக்கும் ஒரு மாநிலம் ஹரியாணா. அப்படிப்பட்ட பின்தங்கிய மாநிலத்தில் மஹாவீர் சிங் தன்னுடைய மகள்களை





மல்யுத்த வீராங்கனைகளாக உருவாக்கியதன் பின்னணியை இந்தப் படம் அலசியிருக்கிறது. மஹாவீர் தன்னுடைய கனவை மகள்கள் மீது திணித்திருக்கிறார் என்ற பொதுவான ஒரு குற்றச்சாட்டு வைக்கப்படுகிறது.

ஆனால், அவருடைய தரப்பை இந்தப் படத்தில் சில அழுத்தமான காட்சிகளில் நியாயப்படுத்தியிருக்கிறார் இயக்குநர். "பதினான்கு வயதாகிவிட்டால் பெண்ணைத் திருமணம் செய்துகொடுத்து கடமையை முடித்துவிட வேண்டும் என்று நினைக்கும் அப்பாக்கள்தான் இங்கு அதிகம். அவர்களுக்கு மத்தியில், உங்களுடைய அப்பா நீங்கள் சாதிக்க வேண்டுமென்று சிந்திப்பது எவ்வளவு பெரிய விஷயம்" என்று கீதா, பபிதாவிடம் அவர்களின் தோழி விவரிக்கும் காட்சியை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். அத்துடன், அப்பா-மகள், அக்கா-தங்கை என உறவுகளுக்குள் இருக்கும் ஆழமான உணர்வுகளை நுணுக்கமான காட்சிகளால் விளக்கியிருக்கிறார் இயக்குநர்.

அப்பா தங்களைக் கொடுமைப்படுத்துவதாக நினைக்கும் சிறுமிகள் மனம் மாறுவது நம்பகத்தன்மையுடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. தேசியப் பயிற்சி மையத்துக்குப் போன பிறகு அப்பாவுடன் ஏற்படும் முரண்பாடுகளும் அவை தீரும் விதமும் நெகிழ்ச்சியும் யதார்த்தமும் கொண்ட காட்சிகளாக விரிகின்றன. தன் மகளுக்கு நேரடியாகப் பயிற்சியளிக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்ட தந்தை அதை எப்படி எதிர்கொள்கிறார் என்பதும் நன்கு காட்டப்படுகிறது. மல்யுத்தச் சண்டைப் பயிற்சிகளும் காட்சிகளும் நன்கு படமாக்கப்பட்டுள்ளன.

ஒரு தகப்பனின் கனவு நனவாகும் கதையைச் சொல்லும் காட்சிகளில் இருக்கும் யதார்த்தம், நேர்மை, சுவாரசியம் ஆகியவை நம்மைக் கவர்கின்றன. அப்பாவுக்கும் பெண்ணுக்கும் இடையே நடக்கும் மோதல், அப்பாவின் உணர்வை, தேவையை ஒரு கட்டத்தில் மகள் புரிந்து கொள்வது எனச் சில காட்சிகள் நெகிழ வைக்கின்றன. ஸ்ரீ ராமின் ஒளிப்பதிவும், பிரீத்தமின் இசையமைப்பும் முக்கிய மான அம்சங்களாக இருக்கின்றன. ஆமிர் கான் எந்தவொரு காட்சியிலும் மிகை இல்லாத நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.

மகள்களாக நடித்திருக்கும் ஃபாத்திமா, சன்யா இருவரும் படத்துக்குச் சிறப்பான பங்களிப்பைச் செய்திருக்கின்றனர். சிறுவயது கீதா பபிதாவாக வரும் ஜாய்ராவும், சுஹானியும், ஓம்காராக வரும் ரித்விக்கும் தங்களுடைய கவித்துவமான நடிப்பால் முதல் பாதி திரைப்படத்தை முழுமையாக ஆக்கிரமித்திருக்கின்றனர். இந்த அறிமுக நட்சத்திரங்களின் தேர்வு படத்தின் முக்கியமான பலம். படத்தின் சேது

பெண்களை மையமாகக் கொண்ட படம் என்பதால் பெண்ணிய அம்சங்களைச் செயற்கையாகத் திணிக்காமல் இருந்தது பெரிய ஆறுதல். விளையாட்டுக்கு ஆண்-பெண் வித்தியாசமெல்லாம் இல்லை. கடின உழைப்பும், மன உறுதியும் இருந்தால் எந்த விளையாட்டாக இருந்தாலும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை விதைக்கிறது 'தங்கல்'. சொல்லப்படாத உண்மைக் கதைகளைத் தேடி எடுத்துச் சுவையான படமாகத் தந்திருக்கும் ஆமிர் கானுக்கும் அவர் குழுவினருக்கும் ஒரு பூங்கொத்து. **- இர்வின்**



# அ.தி.மு.க.வின் எதிர்காலமா...? சசிகலா.!

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு அதிமுகவின் பொதுச்செயலாளர் பொறுப்பை யார் ஏற்கப்போகிறார் என்பதுதான் இன்றைய பேசுபொருள். தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தொடங்கி கட்சியின் மூத்த, முன்னணி நிர்வாகிகள் பலரும் சசிகலாவே பொதுச்செயலாளராக வர வேண்டும் என்று விருப்பம் தெரிவித்துள்ளனர். நேரடியாகப் பார்த்தால், வெறும் கட்சிப் பதவிபோலத் தோற்றம் அளித்தாலும், ஆளும்கட்சியான அதிமுகவின் பொதுச்செயலாளர் என்பவர் மறைமுகமாக தமிழகத்தின் கடைக்கோடி நிர்வாகம் வரை தீர்மானிக்கும் வல்லமை படைத்தவர். எப்படி?

அதிமுக தொடர்பான அத்தனை நிர்வாக நடவடிக்கைகளுக்கும் பொறுப்பேற்கக்கூடிய பொதுச்செயலாளர் கட்சியின் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களால் மட்டுமின்றி, கட்சியின் அடிப்படைத் தொண்டர்களின் பங்களிப்போடு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பதுதான் அதிமுகவின் அடிப்படை விதி. மற்ற கட்சிகளில் இல்லாத விதிமுறை இது.

பொதுச்செயலாளர் தேர்தலில் தமிழ் நாட்டுக் கட்சித் தொண்டர்கள் மட்டுமின்றி, கட்சியின் கிளைகள் இருக்கின்ற புதுச்சேரி, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, அந்தமான் என அனைத்து மாநில அடிப்படை உறுப்பினர்களும் தேர்தலில் வாக்களித்து அல்லது ஏகமனதாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கட்சியின் அடிப்படை உறுப்பினர்களால் தேர்ந் தெடுக்கப்படும் பொதுச்செயலாளர், கட்சியின் அடிப்படை உறுப்பினர்களிலிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துணைப் பொதுச் செயலாளர்கள், பொருளாளர், தலைமைக் கழகச் செயலாளர்களை நிர்வாக வசதிக்கேற்ப நியமித்துக்கொள்ளலாம். கட்சியின் செயற்குழு, பொதுக்குழுவை உருவாக்கும் அதிகாரம் பொதுச் செயலாளருக்கே உண்டு. அவற்றைக் கூட்டுகின்ற உரிமையும் அவருக்கே உண்டு. கட்சியின் துணை அமைப்புகளுக்கான நிர்வாகிகளை நியமிக்கும் அதிகாரம் பெற்ற பொதுச்செயலாளர், கட்சியின் பொதுக்குழு, செயற்குழுவின் வழிகாட்டுதலோடு கட்சிக்கான கொள்கைகளை உருவாக்குவது, செயல்திட்டங்களை வகுப்பது ஆகியவற்றை மேற்கொள்ளலாம்.

பொதுச்செயலாளர் விரும்பினால், கட்சியின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள பிரத்யேகத் துணைச் செயலாளரை நியமிக்கலாம். அதேபோல, இணைச் செயலாளர்கள், துணைச் செயலாளர்களையும் நியமித்துக் கொள்ளலாம். ஒருவேளை, கட்சி நிர்வாகப் பதவிகளில்

மூன்றில் ஒரு பங்கு இடம் பெண்களுக்குக் கிடைக்கப்படாத பட்சத்தில், அதை ஈடுசெய்யும் வகையில், குறிப்பிட்ட பொறுப்புகளில் பெண்களை நியமிக்கும் அதிகாரம் பொதுச் செயலாளருக்கு உண்டு. வெறுமனே பெண்களுக்கான பிரதிநிதித்துவத்தைத் தாண்டி, இந்த ஷரத்தை நோக்கினால், உள்ளர்த்தம் விளங்கும்.

கட்சியின் ஒட்டுமொத்த வரவு செலவுக் கணக்கையும் நிர்வகிக்கும் அதிகாரம் பெற்றவர் பொதுச்செயலாளர். குறிப்பாக, கட்சியின் தலைமை அலுவலகம் மட்டுமின்றி, அதன் இதர அசையும், அசையாச் சொத்துகளை நிர்வகிக்கும் அதிகாரமும் அவருக்கே. அந்தச் சொத்துகள் தொடர்பாக எழுகின்ற சட்டரீதியான சிக்கல்களை எதிர்கொள்ளும்போது, கட்சியின் பிரதிநிதியாகச் செயல்பட்டு, கட்சியின் சொத்துகளைக் காப்பாற்றும் பொறுப்பும் அவருக்கே உண்டு.

கட்சிக்கான பணத்தை எந்தவொரு சட்டபூர்வ வங்கியிலும் பாதுகாப்பாக வைப்பதற்கும், அந்தப் பணத்தை எடுத்து, கட்சி வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்குமான அதிகாரம் பொதுச்செயலாளருக்கு உண்டு. முக்கியமாக, கட்சியின் சொத்துகளை மேற்குறிப்பிட்ட வங்கிகளில் அடகுவைத்துக் கடன் பெற்று, அந்தப் பணத்தையும் கட்சி வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம். பொதுச் செயலாளரின் அனுமதியோடு, இந்த விவகாரங்களைக் கட்சியின் பொருளாளரே செய்ய முடியும்.

முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் மாற்றங்கள் நிகழும்போது, கட்சியின் நிர்வாகக் குழுக்களைக் கூட்டுவதற்குப் போதுமான கால அவகாசம் இல்லாதபோது, முடிவெடுக்கும் அதிகாரம் பொதுச்செயலாளருக்கு உண்டு. அந்த முடிவுக்கு அடுத்த பொதுக்குழுவில் ஒப்புதல் பெற்றுக்கொள்ளலாம். பொதுச்செயலாளர் விரும்பினால், கட்சி நிர்வாகிகளின் கருத்துகளைக் கடிதம் வழியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

கட்சியின் உட்கட்சித் தேர்தல்களை நடத்தும் அதிகாரமும் பொதுச்செயலாளருக்கே உண்டு. அதில் போட்டியிடுவதற்குச் சில விதிமுறைகள் இருக்கின்றன. குறிப்பாக, ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளானவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு நிபந்தனைகள் இருக்கின்றன. ஆனால், அவற்றைத் தளர்த்திக் கொள்ளும் அதிகாரம் பொதுச் செயலாளருக்கு உண்டு.

உள்கட்சித் தேர்தலைத் தாண்டி, சட்டமன்ற, நாடாளுமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தேர்வு செய்வது ஆட்சிமன்றக் குழுவுக்கு உண்டு. ஆனால், அவர்களுக்குக் கட்சியின் இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கீடு செய்ய பொதுச் செயலாளரின் கையெழுத்து அவசியம். ஆட்சி மன்றக் குழு கூடுவதற்குக் கால அவகாசம் இல்லாதபோது, வேட்பாளர் தேர்வு விஷயத்தில் முடிவெடுக்கும் அதிகாரம் பொதுச் செயலாளருக்கு உண்டு.

கட்சியின் ஒட்டுமொத்த நிர்வாகமும் பொதுச்செயலாளரின் அதிகாரத்துக்கு உட்பட்டவை. ஒருவேளை, அதுவிஷயமாகப் பொதுச்செயலாளரை எதிர்த்து ஒருவர் நீதிமன்ற நடவடிக்கைக்குச் செல்லும்பட்சத்தில், உடனடியாக அவர் தனது அடிப்படை உறுப்பினர் பதவியை இழந்துவிடுவார். கட்சியின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முடியும். ஆனால், அது பொதுச் செயலாளர் பதவிக்கும் பொருந்துமா என்பதுதான் உண்மை.

**- எஸ். சரவணன்**



# இலங்கையிடம் இந்தியா கற்றுக்கொள்ள வேண்டும்..!




ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான உலக சுகாதார அமைப்பின் கூட்டம் இலங்கையில் கடந்த செப்டம்பர் 5-ல் நடைபெற்றது. 'மலேரியா இல்லாத நாடு' என்று அது இலங்கையை அறிவித்தது. பொது சுகாதாரம் தொடர்பான இலங்கையின் பெரும் சாதனைகளில் இது ஒரு மைல்கல். வாழ்நாள் அதிகரிப்பு, சிசு மரண விகிதம், சராசரிக் குடும்பத்தின் அளவு என்ற நல்வாழ்வு தொடர்பான மற்ற குறியீடுகளிலும் இது எதிரொலிக்கிறது.

தென் கிழக்கு ஆசியாவில் 11 நாடுகள் உள்ளன. இலங்கையைத் தவிர்த்து மாலத் தீவுகளும் மலேரியாவை ஒழித்துள்ளது. இது ஒன்றும் தற்செயலாக நடந்தது அல்ல. இரு நாடுகளுக்கும் மக்களின் நல்வாழ்வு பற்றிய விவகாரங்களில் தொடர்ந்து தலையிட்ட வரலாறு உண்டு. சிறந்த மருத்துவக் கட்டமைப்புகளையும் அவை உருவாக்கியுள்ளன. இந்த இரண்டு நாடுகளின் மலேரியா ஒழிப்புச் சாதனை, ஒட்டு மொத்தத் தென் கிழக்கு ஆசியாவுக்கானதுதான். ஆனாலும், இந்த நாடுகளில் நீண்ட காலமாக, மலேரியா இல்லை என்ற நிலை, படிப்படியாக நடைபெற்ற பல்வேறு தொடர் முயற்சிகள் மலேரியாவை ஒழித்துக்கட்டும் நிலைவரை தொடர்ந்தன என்பது முக்கியமாகக் கவனிக்க வேண்டியது. ஏனென்றால், மலேரியா அதிகமாகப் பரவியுள்ள நாடுகளிலிருந்து மலேரியா ஒழிக்கப்பட்ட நாடுகளுக்கு இடம்பெயர்ந்து வருபவர்கள் மூலம் எளிதாக மறுபடியும் மலேரியா பரவும் அபாயம் இருக்கிறது.

1940 - களில் ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்திலேயே டிடிடி எனும் நோய்த் தடுப்பு முறை பயன்படுத்தப்பட்டது. மேற்கத்திய மருத்துவ முறைகள் 1930-களிலேயே தொடங்கிவிட்டன. 'இலங்கையின் மலேரியா கட்டுப்பாட்டுக்கான 100 ஆண்டு முயற்சிகள் (1911- 2011)' எனும் ஆவணத்தைப் பெர்னாண்டோ மற்றும் வருஷ விதானா இருவரும் உருவாக்கினார்கள். அதில் மலேரியா கட்டுப்பாட்டுக்காக இலங்கை செய்த முயற்சிகள், சிறப்பாகப் பயனளித்தவை என்றும் பின்னடைவுகள் என்றும் ரகம் பிரிக்கப்பட்டுள்ளன.

பொதுவாக, மலேரியா இல்லாத பிரதேசங்களான, அடர்த்தியான மக்கள் வசிக்கும் மேற்குப் பகுதியில் கடும் வறட்சி, உணவுப் பற்றாக்குறை, மலேரியா தாக்குதல் எனும் மூன்று பேரழிவுகளை 1934- 35 காலகட்டத்தில் இலங்கை அனுபவித்தது. நோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட காலகட்டமாக அது இருந்தது.





www.dinakaran.com

அனைவருக்கும் வாக்குரிமை தரப்பட்ட 1931-ம் வருடத்துக்குப் பிறகு பெருமளவில் நோய் பரவிய இந்தக் காலகட்டத்துக்கான எதிர் வினையாகத்தான் 1940 முதலாக அனைத்துக் குடிமக்களுக்கும் மானிய விலையில் உணவு வழங்குதல், இலவச மருத்துவச் சேவை, இலவசக் கல்வி ஆகியவற்றைத் தரும் மக்கள் நல அரசாக இலங்கை வளர்ச்சியடைந்தது.

சுதந்திர இலங்கையின் முதல் தலைமுறை அரசியல் தலைவர்கள் 1934 - 35 காலகட்டத்தில் மலேரியாவால் ஏற்பட்ட அழிவுகளை நேரில் பார்த்தார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு நடத் தப்பட்ட நிவாரணப் பணிகளில் நேரடியாகப் பங்கேற்றார்கள். அதனால், அவர்கள் அரசின் செலவில் மக்களுக்கு மருத்துவச் சேவைகள் கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள்.

மலேரியா பரவக்கூடிய இடங்களில் டிடிடி மருந்து தெளிப்பது 1945-ல் தொடங்கியது. 1946-ல் 27 லட்சம் பேர் மலேரியாவால் பாதிக் கப் பட்டிருந்தனர். அது 1963-ல் 17 ஆக மாறியது. இது ஒரு மிகச் சிறப்பான வெற்றி. அந்த நேரத்தில் அதிகாரிகள் இன்னும் கொஞ்ச காலத்தில் நாம் ஒட்டுமொத்தமாக மலேரி யாவை ஒழித்து விடுவோம் என்றும் நம்பி னார்கள். அந்த எதிர் பார்ப்பு பலிக்கவில்லை. 1968-ல் மீண்டும் மலேரியா பெரிய அளவில் தாக்கியது. மருந்துகள் மற்றும் தடுப்பு முறை களின் சக்தி களையும் முறியடித்து மலேரியா கிருமிகள் தாக்குப்பிடித்து மீண்டன என்று 1970-களில் கண்டுபிடிக்கப்பட்டது. இலங்கை யின் முன்னேற்றத்துக்கு இது பெரும் அச்சுறுத் தலாக இருந்தது. தொடர்ந்து, நாட்டின் மருத் துவக் கட்டமைப்பு மேம்படுத்தப்பட்டு, மலேரி யாவால் சாகிறவர்கள் குறைக்கப்பட்டாலும், புதிய வகையான மலேரியா கிருமிகளின் தாக்குதல் நடந்தது.

மலேரியாவுக்கு எதிரான நடவடிக்கைகள் இந்தப் புதிய சவாலுக்கு ஏற்ப மாறின. டிடிடி மருந்து தெளிப்பு மாலதியான் வகை மருந்துக்கு மாறியது. மலேரியாவைக் கட்டுப்படுத்துவது என்பது ஒழிப்பதாக மாறியது. மற்ற மருத்துவச் சேவைகளோடு மலேரியா ஒழிப்பும் இணைக் கப்பட்டது. மருந்துகள் முதல் கொசு வலைகள் வரையாக, பன்முனைப் பாதுகாப்பு ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவை பயனளிக் கின்றன எனும் அறிகுறிகள் 1990-களில் காணப் பட்டன. நோய் குறிப்பிட்ட இடங் களில் முடங்கியது.



1998 முதல் 2002 வரையான கால கட்டத் தில் மலேரியா தாக்கியது. பொதுமக்கள், படை யினர், விடுதலைப் புலிகள் என அனைவரை யும் அது பாதித்தது. 1983 முதலாகப் புலிகளுக்கும் படைகளுக்கும் இடையே கடும் சண்டை நடந்தா லும், ராணுவக் காரணங்களுக்காக அரசோ, புலிகளோ மலேரியாவை ஒரு கருவியாகப் பயன்படுத்தவில்லை. அதற்குப் பதிலாக, மலே ரியாவுக்கு எதிரான பணிகள் நடக்கும்போது இரண்டு தரப்பினரும் சண்டைநிறுத்தம் செய்து உதவியுள்ளனர். மலேரியா என்பது பொது எதிரி என்பது அனைவருக்கும் தெரிந்திருந்தது. புலிகளுக்கும் இலங்கைப் படையினருக்கும் நார்வே நாட்டின் துணையோடு ஏற்பட்ட அமைதி உடன்பாடும் போர் நடைபெற்ற இடங்களில் மலேரியா ஒழிப்புப் பணிகள் நடைபெற உதவியது.

பொதுவாக, தெற்காசியாவில் மலேரியா கட்டுப்படுத்தப்பட்டுதான் இருக்கிறது. ஆப்கன், வடகிழக்கு இந்தியா, மியான்மர் ஆகிய பகுதி களில் ஆயுத மோதல் நடைபெறும் இடங்கள் மலேரியாவால் பாதிக்கப்பட்ட இடங்களாகவும் பரப்பும் இடங்களாகவும் உள்ளன. உள்ளூர் கண்காணிப்பு, மலேரியாவைப் பரப்புகிற கொசுக்கள், மனிதர்களின் நடத்தைகள் ஆகிய வற்றின் மேல் நீண்ட காலத்துக்கு அதிகமான கவனம் தேவைப்படுகிறது.

மலேரியாவைக் கட்டுப்படுத்துவதில் மக்களின் பங்கேற்பை அதிகப்படுத்த வேண்டும். வாழ்வாதார மேம்பாடு, வறுமை ஒழிப்பு, இருதரப்பு ஆயுதமோதல் நடைபெறும் இடங்களில் அவற்றைத் தடுப்பதற்கான பணிகள் என்று பன்முகச் செயல்பாடுகள் தேவை! இன்றும் சொல்லப்போனால் இலங்கையிடம் இந்தியா நிறைய கற்றுக்கொள்ள வேண்டும்

– தரணி



# ரெய்டு நடந்ததின் பின்னணி?

தமிழகத்தின் தலைமைச் செயலாளராக இருந்த ராம மோகன ராவ் வீடு, தலைமைச் செயலகத்திலுள்ள அவரது அறை உள்பட 14 இடங்களில் வருமான வரித் துறையினர் சோதனை நடத்தியுள்ளதும், அதன் தொடர்ச்சியாக அவர் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளதும், தமிழக அரசு நிர்வாகம் தொடர்பில் வந்திருக்கும் மோசமான அறிகுறிகள். இதுவரை தமிழக வரலாற்றில் நடந்திராத மோசமான சம்பவமாகவே இதைப் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஒரு மாநிலத்தின் அரசு இயந்திரத்தைக் கையில் வைத்திருப்பவர் தலைமைச் செயலாளர். அடிப்படை முகாந்திரம் இல்லாமல், இவ்வளவு உயர் பொறுப்பில் இருக்கும் ஒரு அதிகாரியின் மீது வருமான வரித் துறை சோதனையில் இறங்கியிருக்கும் என்பது நம்ப முடியாதது. மேலும், ராம மோகன ராவ் மீதான இந்நடவடிக்கையின் பின்னணியில் பேசப்படும் சம்பவங்களும் முகம்சுளிக்க வைக்கின்றன. சில வாரங்களுக்கு முன் சென்னை தி.நகரில் வசிக்கும் தொழிலதிபர் சேகர் ரெட்டியின் வீடுகள், அவர் சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் தொடர்ந்து நான்கு நாட்கள் வருமான வரித் துறையினர் சோதனை நடத்தினர். அப்போது, ரூ.34 கோடி புதிய ரூ. 2 ஆயிரம் நோட்டுகள் உட்பட ரூ.147 கோடி பணம்; 178 கிலோ தங்கம் மற்றும் ஏராளமான ஆவணங்களை அதிகாரிகள் கைப்பற்றினர்.





ஆளும் கட்சியினரோடு நெருக்கமான உறவில் இருப்பவர் என்று சுட்டிக்காட்டப்படுபவர் சேகர் ரெட்டி. தமிழக அரசு சார்ந்த ஒப்பந்தங்களைப் பெரிய அளவில் எடுத்தவர். "பலருடைய ஊழல் கறுப்புப் பணமும் சேகர் ரெட்டி மூலமாக வெள்ளையாக்கப்படும் முயற்சி நடந்திருக்கலாம்" என்று பேசப்பட்டது.

இந்நிலையில், சேகர் ரெட்டி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில், ராம மோகன ராவ் வீடு மற்றும் அலுவலகங்களில் இந்தச் சோதனைகள் நடத்தப்பட்டதாக வெளியாகும் தகவல்கள் மிகுந்த சங்கடத்துக்கு உள்ளாக்குகின்றன. ஒரு மாநிலத்தின் தலைமைச் செயலாளர் பதவி எவ்வளவு மாண்புக்குரியது; இன்றைய சூழலில் அது இழிவானதாக மாறிவிட்டது!



இந்த விவகாரம் தொடர்பாக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் விளக்கம் ஏதும் அளிக்கவில்லை. எனினும், ராம மோகன ராவ் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருக்கிறார். தமிழகத்தின் புதிய தலைமைச் செயலாளராக கிரிஜா வைத்தியநாதன் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்நடவடிக்கைகளை எப்படிப் புரிந்துகொள்வது எனத் தெரியவில்லை. ஒருவேளை, ராம மோகன ராவ் மீது குற்ற முகாந்திரம் இருக்குமானால், அது தொடர்பிலான அனைவர் மீதும் நடவடிக்கை எடுப்பதோடு முதல்வரின் கடமை முடிந்துவிடாது. தார்மிகப் பொறுப்பேற்பு எனும் விழுமியத்தின் முன் அதிமுக அரசும் நிற்க வேண்டிவரும் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

இதனிடையே, தமிழக அரசை அச்சுறுத்தி, தன் கைவசம் வைத்துக் கொள்ள மோடி அரசு ஏவியிருக்கும் நடவடிக்கையே இந்தச் சோதனை என்ற பேச்சும் கிளம்பியிருக்கிறது. இதற்கான நியாயங்களையும் முற்றிலுமாக மறுப்பதற்கில்லை. முன்னதாக, ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் சோதனை நடத்தப்பட்ட கரூர் அன்புநாதன் வீட்டில் கோடிக்கணக்கான பணம் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து, முன்னாள் அமைச்சர் நத்தம் விஸ்வநாதன், சென்னை முன்னாள் மேயர் சைதை துரைசாமி ஆகியோருக்குச் சொந்தமான இடங்களிலும் சோதனை நடந்தது. இதுபற்றி அந்தச் சமயத்தில் பரபரப்பாகத் திரைமறைவில் பல விஷயங்கள் பேசப்பட்டாலும், பிறகு அது தொடர்பாக எந்த விவரத்தையும் வருமான வரித் துறையோ, மத்திய அரசோ வெளியிடவில்லை. அப்படியென்றால், இந்தச் சோதனைகளின் பின்னுள்ள அரசியல் என்ன? உள்ளபடி திரைமறைவில் என்னவெல்லாம் நடக்கின்றன?

மக்களுக்கு இந்த விவகாரம் தொடர்பாக விளக்கம் அளிக்க வேண்டிய கடமை மக்கள் பிரதிநிதிகளுக்கு உண்டு. ராம மோகன ராவ் குற்றமிழைத்தவர் என்றால், அதை மத்திய அரசு அம்பலப்படுத்த வேண்டும். வருமான வரித் துறைச் சோதனைகளைப் பகடைக் காயாக்கி தமிழக அரசை மத்திய அரசு ஆட்டுவிக்கிறது என்றால், அதை மாநில அரசு அம்பலப்படுத்த வேண்டும்!

**– ரமேஷ்குமார்**

# கருநிற காக்கிகள்

ஆ.மவுரியன்

6

செளகர்பேட்டை பஜார் வீதியில் உள்ள அடகு கடைக்கு ராஜசேகர் வந்தான், கடையின் உரிமையாளர் சேட் உக்கார்ந்திருந்தான் என் பெயர் ராஜசேகர் கேள்விப்பட்டிருக்கீங்களா? என்று கேட்டான், கேள்வி பட்டிருக்கேன் என்று சொன்னான் சேட். ராஜசேகர் குறிக்கிட்டு உன் பெயர் என்ன சேட்ஜி?. என் பெயர் ஆம்பலால் சேட், சொந்த ஊர் செளராஷ்ட்ரா இங்கே வந்து செட்லாகி 50 வருஷமாச்சி என்றார். ஆம்பலாலோ ? ஆம்லேட்லாலோ, எதனா இருக்கட்டும் நேரா டீலிங்குக்கு வர்ரேன் இதப்பாரு சேட்ஜி உங்க கடைக்கு வரவன் எல்லாம் நகை, நட்டு, பித்தள, வெள்ளி, அண்டா, குண்டான்னு அடகு வைப்பாங்க அதெல்லாம் எங்கிட்ட இல்ல ஒரு அஞ்சு லட்சம் கடனா வேணும் என்றான் ராஜசேகர்.

அதிர்ச்சியில் வாயை பிளந்தவன் சிறிது நேரம் மூடவில்லை. இத பாரு சேட்ஜி என்கிட்ட இருக்கிற ஒரே சொத்து என் கையில இருக்கிற பேனா தான் சேட்ஜி. கோவ்மாகி அத வச்சி ஒரு பைசா கொடுக்க முடியாது.

எங்கிட்ட தங்க பேனா, வைர பேனாவே இருக்கு இதுக்கெல்லாம் துட்டு தர முடியாது என்று பேனாவைத் தூக்கி போட்டான். ராஜசேகர், அத்த இரண்டு பேனாவை எடுத்துக் கொண்டு இத பாரு சேட்ஜி எங்கிட்ட இருக்கிற பேனா வெறும் மூன்ரூபா தான், ஆனா அதவச்சு உன் அஸ்திவாரத்தை ஆட்டம் காண வச்சிடுவேன், செளராஷ்ட்ராவில் உன் அண்ணன், தம்பி, அக்கா, தங்கச்சி, நண்பர்கள் பேர்ல வாங்கி போட்டியிருக்கிற சொத்து 200 கோடியை தாண்டும், அரசு வங்கி, தனியார் வங்கினு 20–க்கு மேற்பட்ட வங்கிகள்னு 500 கோடிக்கு மேல பனமா இருக்கு, அங்காடி அதாவது லாக்கர்ல மட்டும் கடத்தல் தங்கம் வைரம்னு 1000 கோடிக்குமே பத்திரமா இருக்கு, இன்னும் சொல்லப்போனா மந்திரி மகனுக்கு உங்க மகனுக்கு கூட்டு பிசினஸ் ஏராளம், என்ன பிசினஸ் சொல்லட்டுமா? வருமான வரித்துறை போட்டுக் கொடுக்கட்டுமா? என்று ராஜசேகர் சொல்லி முடிப்பதற்கும் ஆம்பலாலுக்கு வியர்த்துக் கொட்டியது, போதும்ராஜசேகர்போதும்இப்ப நான் என்ன செய்யனும் அப்படிவா என் வழிக்கு இத பார் சேட்ஜி நீ எனக்கு சும்மா செய்யத் தேவையில்லை நமக்குள்ள ஒரு டீலிங்.

தாண்டவ பிள்ளையோட மகள் கெளரிய நான் லவ் பன்றேன், அவ உன்ன லவ் பன்றாளா? என்று குறுக்கிட்டான் ஆம்பலால் சேட்? யோவ் அவசரபடாதய்யா... அவ இது வரைக்கும் என்ன லவ் பண்ணல, அவ பண்ணவும் கூடாது, என்ன ஒரே குழப்பமா இருக்கு என்று தலைய சொறிந்து கொண்டான் சேட்,

அதுக்கு நான் என்ன பண்ணனும் கண்டிஷன் நெம்பர்–1, நான் கேட்கும் போதெல்லாம் தயங்காம பணத்தை வாரி இறைக்கனும், கண்டிஷன் நெம்பர்–2, உன்னோட பொண்ணு திவ்யா என்ன லவ் பண்ற மாதிரி நடிக்கனும்.

கண்டிஷன் நெம்பர்–3, நம்ப ஆபரேஷன் சக்ஸ் ஆகற வரைக்கும் இந்த மேட்டர் யாருக்கும் தெரியக் கூடாது. அத மீறி தெரிவிச்சா நீ



சௌராஷ்ட் ராவ்லயும் இருக்க முடியாது, இங்கேயும் இருக்க முடியாது, டோட்லா கம்பி எண்ண வேண்டியதுதான். திரும்ப திரும்ப அதையே சொல்லா தீங்க ராஜசேகர், எல்லா கண்டிஷனும் ஓகே... என் பொண்ணு லவ் பண்ற மாதிரி நடிக்கனும்னு சொல்றதுதான் சரி வராது, என் பொண்ணு ஒத்துக்க மாட்டா, யோவ் அதுல ஒரு காரணம் இருக்கு அந்த கௌரிய விட உன் பொண்ணு சுமார்தான். ஆனா, அவளுக்கு உன் பொண்ணு தான் ப்ரண்ட் உங்க பொண்ணோட ப்ரண்ட்ஷீப் எனக்கு தேவைப்படுது இவள வச்சிதான் கௌரிய கரெக்ட் பண்ண முடியும். கௌரி ஓகே ஆயிட்டா ஆயிரம் கோடி சொத்துக்கு நான் ஒரே வாரிசு ஆயிடுவேன்,

உனக்கு நாப்பது எனக்கு அறுபது சதவீதம், இது வெரி குட் ப்ளான் நான் எப்படியாவது என் பொண்ண சம்மதிக்க வைக்கிறேன். ஆனா எனக்கு ஒருடவுட்டு, என்னைய்யா, இன்னும் டவுட்டு, இவ்வளவு பெரிய விஷயத்துக்கு உனக்கு டேலண்ட் இருக்கா இல்லையானு எனக்கு தெரியனும் அதுக்கு நான் என்னய்யா பண்ணனும்,

அதோ அந்த கடையில பர்சேசிங் பன்றாங்க பாரு அம்மாவும், பொண்ணும் அவுங்ககிட்ட நேரடியா போயி உன்னோட பிரா சைஸ் என்னனு கேட்டுட்டு வரனும், ஒரு கண்டிஷன் இத தெரிஞ்சிக்காம வந்தாலும், அடி வாங்கிட்டு வந்தாலும் நம்ப டீலீங்குக்கு நான் நோ சொல்லி டுவேன் என்று சேட் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே ராஜசேகர் அந்த பேன்சி கடைக்குள் நுழைந்துவிட்டான்.

போடா, போ... என்னய்யா ஒழிக்க பாக்குற சிட்டி கமிஷனரோட மகளும், மனைவி யும்தான் அவுங்க நீ கேட்கறது எல்லாம் அங்க யிருக்கிற சி.சி.டி.வி. கேமராவ்ல பதிவாயிடும் அதவச்சி உன்ன கமிஷனருக்கிட்ட மாட்டி விடுறேன். உனக்கே இவ்வளவு புத்தியிருந்தா சௌராஷ்ட்ராகாரனுக்கு எவ்வளவு புத்தி இருக்கும் என்று தனக்குத்தானே பேசிக் கொண்டான்.

தமிழரசின் வீட்டின் அதிர்ச்சியில் உறைந்து நின்ற வேலக்காரி சிறிது நேரத்தில் சகஜ நிலைக்கு வந்தாள். எதிர் முனையில் பேசிய தமிழரசு நான் இராத்திரி வீட்டுக்கு வரல துணியெல்லாம் ஐயன் பண்ணி வச்சிடு, நான் வந்திட்டிருக்கேன் என்று சொன்னது கேட்டுத்தான் இப்படியானாள் இப்பதான் வெளியப்போனாரு, வரட்டும் போட்டுகினுபோன டிரஸ்ஸு நல்லா ஞாபகம் இருக்கு யார பயமுறுத்திறீங்க, நான் யாரு பேய் பிசாசு எல்லாதையும் விரட்ன தாதா பேயி... பார்க்கிறேன் ஒரு கை, என்று கொஞ்ச உதரளாக வேலைக்காரி பேசிக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது தமிழரசு வண்டியில் உள்ளே வந்து வண்டியை நிறுத்தி விட்டு வந்தான். வேலைக்காரி நினைத்ததுபோல் நடக்கவில்லை, நேற்று போட்டியிருந்த உடையில்தான் வந்தான் தமிழரசு. அதை பார்த்ததும் மயங்கி விழுந்தாள்.

**தமிழரசு தன் சட்டையின் மேல் போட்டியிருந்த சட்டையும், பேண்டையும் அவிழ்த்து அலமாரியில் போட்டுவிட்டு தண்ணீர் தெளித்து எழுப்பினான், வேலைக்காரி மீண்டும் மயக்கம் போட்டு கீழே விழுந்தாள்.**

- தொடரும்.




## 10 வருட கால கனவு நிறைவேறுமா...?
## திறக்கப்படாமல் இருக்கும் மருத்துவமனை
# திறக்கப்படுமோ?
## நடவடிக்கை எடுப்பாரா தருமபுரி மாவட்ட ஆட்சியர்...?

தருமபுரி மாவட்டம் அருகில் வெள்ளோலை என்ற கிராமம் உள்ளது. வெள்ளோலை கிராமத்தில் இருந்து மருத்துவ மனைக்கு செல்ல வேண்டும் என்றால் 12 கி.மீ செல்ல வேண்டும். அந்த பிரச்சனையை போக்கும் வகையில் வெள்ளோலை கிராமத்தில் உள்ள வேட்ராயன் கெட்டாய் என்ற பகுதியில் அரசு துணை சுகாதார நிலையம் ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி துறையின் சார்பில் தருமபுரி ஊராட்சி ஒன்றியம், வெள்ளோலை கிராமம், வேட்ராயன் கொட்டாய் பகுதியில் சிறுசேமிப்பு ஊக்க நிதியின் சார்பில் அரசு துணை சுகாதார நிலையம் 2006−2007−ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.


அரசு துணை சுகாதார நிலையம் 2006−ஆம் ஆண்டு கட்டிடம் பணிகளை தொடங்கி 6 மாதத்தில் முடிக்கப்பட்டது. அந்த கட்டிட பணி மெத்தனப் போக்கில் ஆமை வேகத்தில் நடந்து முடிக்கப்பட்டது. அதன் பின்னர் எப்போது திறக்கப்படும் என்று மக்கள் பல நாட்களாக ஆர்வத்துடன் எதிர்பார்த்து கொண்டிருந்தன.

ஆனால் நடந்தது என்ன? வேட்ராயன் கொட்டாய் பகுதியில் உள்ள மாதையன் என்பவர் பட்டதாரி இளைஞரிடம் மக்களின் சார்பாக கேள்விகள் கேட்டோம்? அவர் அளித்த பதில்; நாங்கள் மருத்துவமனைக்கு செல்ல மிகவும் சிரமமாக இருந்தது. எங்கள் பகுதியில் அரசு துணை சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

அக்கட்டிட பணிகளை முடிக்க 4.80 லட்சம் செலவில் கட்டிட பணிகளில் இதில் பல ஊழல்கள் நடந்து இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டது. அந்த மின்சார இணைப்பு இருந்தும், ஆழ்துளை கிணறு இருந்தும் எந்தவித அடிப்படை வசதியும் செய்யாமல் கட்டிட பணி முடிக்கப்பட்டு நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாக எங்கள் ஊரில் மருத்துவ மனைக்கு செல்ல முடியாமல்

பலபேர் உயிர் இழந்துள்ளனர்.

இதை திறந்து வைக்க மாவட்ட ஆட்சியர் அவர்களிடமும் அதேபோல் முன்னால், முன்னால் கல்வி துறை அமைச்சர் கே.வி. பழனியப்பன் மற்றும் தற்போது இருக்கும் கல்வித்துறை மனுக்களை இளைஞர்கள் சார்பில் கொடுக்கப்பட்டது. இதில் எந்தவித பயனும் கிடைக்கவில்லை. அதேபோல் திறந்து வைக்கப்படாமல்



மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

அதேபோல் வெள்ளோலை ஊராட்சி, கோம்பை பகுதியில் உள்ள ராஜம்மன் என்ற பெண்ணிடம் கேட்டோம் அவர் அளித்த பதிலும் கோபமான சில கேள்வியும் அரசு துறைக்கு...

எங்கள் பகுதியில் உள்ள பெண்கள் கர்ப்பக் காலங்களில் மருத்துவ மனைக்கு செல்ல முடியாமல் இறந்துள்ளனர். ஆனால் புதிய அரசு துணை சுகாதார நிலையம் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் நடந்தது அந்த பகுதியில் உள்ள மக்கள் மருத்துவமனை யை "மாடு" "ஆடு" போன்ற விலங்குகளுக்கு தங்கும் விடுதியாகவும், அந்நியர்கள் மதுபானம் அருந்தும் விடுதியாக மாறி, அருந்திய பாட்டில் களை அங்கேயே போட்டு உடைத்து வருகின் றனர். இதை பலமுறை ஆட்சியரிடம் முறை யிட்டும் எவ்வித பயன் அளிக்காமல் உள்ளது.

நான் அறிந்த தகவல்படி, மருத்துவமனை 2006−ம் ஆண்டு தொடங்கி 10 வருடம் காலம் முடிந்துவிட்டது. இதை திறக்காததற்கு காரணங்களை ஊராட்சி மக்களிடம் பலரை அணுகி கேட்டோம். அவர்கள் கூறிய பதில், கோவில் நிலத்தில் கட்டப்பட்டுள்ளதின் காரணமாக திறக்க முடியவில்லை என அரசு துறையினர் கூறி வருகின்றனர்.

கட்டிடம் கட்டும் போது அரசு




துறையினருக்கு தெரிந்து இருக்காதா? மக்களை ஏமாற்றி வருகின்றனர் அரசு துறையினர். அரசு துறைசுகாதார நிலையம் திறக்கப்படுமா? என்பது பொதுமக்களின் 10 வருட கனவும் எதிர்ப்பார்ப்பு நிறைவேறுமா? காலமும் பதில் சொல்லுமா? மக்களின் பிரச்சனையை தீர்க்குமா மருத்துவமனை? பொறுத்திருந்து பார்ப்போம்...

**– சிலம்பரசன்**

# சிந்தனை முத்துக்கள்..!

## தமிழன் வீரம்

நெஞ்சு பொறுக்குதில்லையே – இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால்
அஞ்சியஞ்சி சாவார் – இவர் அஞ்சாத
பொருளில்லை அவனியிலே வஞ்சனை
பேய்கலென்பார் – இந்த மரத்திலென்பார் ;
அந்த குளத்திலென்பார், துஞ்சுது
முகட்டிலென்பார் மிக துயரப்படுவார்
எண்ணியப்படுவார் – பாரதி

## பெரியாரியிஸம்

சூழ்ச்சியால் அடைந்த வெற்றி
மனிதனை சதா சூழ்ச்சியிலேயே
இருக்க சொல்லுமே ஒழிய வெற்றியை
அனுபவிக்கக் கூட நேரமளிக்காது.
– பெரியார்

## நல்லாதான் யோசிக்கிறாங்க...?

கரன்சி அச்சடிக்கும்
அச்சகத்தில் இருந்தே
ரெட்டிக்கு பணம் போனது...
செய்தி இல்ல
தெரியாமதான் கேட்கிறேன்
ரெட்டிக்கே
ஹோம் டெலிவரி
கொடுதிருக்கானுங்களே
இந்த அம்பானி
அதானிக்கெல்லாம்
கொடுக்காமயா
விட்டுறுப்பாங்க.?


## சிறுப் பிள்ளைத்தனம்

டீச்சர் :
சீனப் பெருஞ்சுவர் ஏன்
உலக அதிசயங்களில் ஒன்று?
மாணவன் :
சைனா தயாரிப்பிலே அது
ஒன்னுதான் ரொம்பநாள்
உருப்படியா இருக்கு டீச்சர்

## சிந்தனை செய்...

உலகில் இரண்டு
புனிதமான
இடங்கள் உண்டு.
ஒன்று தாயின் கருவறை
இன்னொன்று
ஆசிரியரின் வகுப்பறை
தாயின் கருவறையில்
ஒருவன் உயிரைப் பெறுகிறான்.
ஆசிரியரின் வகுப்பறையில்
அவன் அறிவைப் பெறுகிறான்.





## ஆன்மிகம்

அன்பும் சிவம் – ஆக்கமும் சிவம்
இயற்கையும் சிவம் – ஈதவும் சிவம்
உலகமும் சிவம் – ஊக்கமும் சிவம்
எல்லாம் சிவம் – ஏகமும் சிவம்
ஐயமின்றி அனைத்தும் சிவம்
ஒற்றுமையும் சிவம்
ஓங்காரமும் சிவம்
ஔவையும் வணங்கும் சிவம்
எங்கும் முக்கண்ணன் சிவம்

## நடைமுறை நீதி

உழைப்பவன்
ஒதுக்கப்படுகிறான்
நடிப்பவன்
மதிக்கப்படுகிறான்
ஏமாற்றுபவன்
பாராட்டப்படுகிறான்

## பஞ்ச் ராதா பஞ்ச்

பண கஷ்டமா இருக்குனு
கோவிலுக்கு போனேன்
அங்க சிறப்பு
தரிசனம் ரூ. 100 /-
சொன்னாங்க
நம்மளவிடு சாமியே
பண கஷ்டத்துல
இருக்கிறாருன்னு
திரும்பி வந்துட்டேன்

## காலமுரண்

அந்த காலத்தில்
சாப்பிட்டவுடன்
வெற்றிலை
போடுவாங்க
இந்த காலத்தில
சாப்பிட்டவுடன்
மாத்திரை
போட்ராங்க

## புலம்பல்

மழை மனைவி
இரண்டிற்கும் ஒரு
ஒற்றுமை இருக்கு?
ரெண்டுமே இல்லாதப்ப
எப்ப வரும்னு ஏங்குவோம்
வந்தா ஏண்டா
வந்துனு புலம்புவோம்..!



## அனுபவம்

நமக்குத்தான் எல்லாம்
தெரியும்
மற்றவர்களுக்கு எதுவும்
தெரியாது என்று
நினைக்கிறீர்கள்
நமக்கு அனைத்தையும்
கற்றுக் கொடுத்ததே
மற்றவர்கள்தான்.

## நல் சிந்தனை

இதயத்தில்
குப்பையை
வைத்திருப்பவன்
தான்
இறைவனைக்
கோவிலில்
தேடுவான்.

# சத்தமற்றுப்போன எதிர்கட்சிகள்

ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிந்தைய, கருணாநிதியின் தள்ளாமைக்குப் பிந்தைய இந்த ஒரு மாதக் காட்சிகள் மீண்டும் ஒரு கேள்வியைத் திட்டவட்டமாக எழுப்புகின்றன. தமிழ்நாட்டின் எதிர்க்கட்சிகள் என்ன செய்கின்றன? மாநில நலன்களை விடுத்து, ஒரு சீட்டு நிறுவனம்போல அவரவர் நலன், பாதுகாப்பு சார்ந்து காய் நகர்த்தும் இந்த அரசாங்கத்தை எதிர்கொள்ளத் தொலைநோக்கும் துடிப்பும் செயலூக்கமும் ஒருங்கமைந்த, மக்களிடம் இடைவிடாது சுழலும் ஒரு தலைவர் இன்று இருக்கிறாரா? தமிழகத்தின் பிரதான எதிர்க்கட்சியான திமுக மட்டுமல்ல; காங்கிரஸ், இரு கம்யூனிஸ்ட் கட்சிகள், பாமக, விசிக, மதிமுக என எல்லா எதிர்க்கட்சிகளுமே இந்தக் கேள்விக்கு மனசாட்சியோடு முகங்கொடுக்க வேண்டும்.

தமிழகத்தின் அடுத்த தலைமுறைத் தலைவர்களில் பெரும்பாலானோர் தங்களுடைய எழுச்சிக்கு கருணாநிதி, ஜெயலலிதா இருவரின் ஆளுமையும் அரசியலும் தடையாக இருப்பதாக எண்ணிப் புலம்புபவர்கள். இருவரும் நேரடியாக இல்லாத அரசியல் களத்தில் தங்களால் மாயாஜாலங்களை நிகழ்த்திவிட முடியும் என்றும் நம்புபவர்கள். இதோ, அப்படியொரு சூழலும் வந்துவிட்டது. என்ன செய்கிறார்கள் எல்லாம்?

ஜெயலலிதா மறைவுக்கு ஒரு வாரம் துக்கம் அனுஷ்டிப்பதாக அறிவித்த அவருடைய சொந்தக் கட்சியான அதிமுககூட, ஜெயலலிதா காலமான அடுத்த நிமிடத்திலிருந்து தீவிரமான அரசியல் காட்சிகளை அரங்கேற்றிக்கொண்டிருக்கிறது. எதிர்க்கட்சிகளோ காலவரையற்ற தூக்கத்தில் மூழ்கியிருக்கின்றன. இரண்டு முக்கியமான விவகாரங்களை எடுத்துக்கொள்வோம்.

முதலாவது, பணமதிப்பு நீக்க விவகாரம். மோடி அரசு நவம்பர் 8 அன்று அறிவித்த ரூ.500, ரூ.1,000 பணமதிப்பு நீக்க நடவடிக்கைக்குப் பின் நாட்டின் பொருளாதாரம், குறிப்பாக கிராமப்புறப் பொருளாதாரம் பெரிய அளவில் முடங்கியிருக்கிறது. பெருமளவிலானோருக்கு வேலை அளிக்கும் விவசாயமும் அமைப்புசாராத் துறையும் அடிவாங்கியிருக்கின்றன. நாட்டின் முன்னணித் தொழில்முனைவு மாநிலங்களில் ஒன்றான தமிழகத்தின் தொழில்துறை நிலைகுலைந்திருக்கிறது. சாமானிய மக்கள் ஒவ்வொரு நாளும் பணம் எடுக்க வங்கிகளின் முன் கால் கடுக்க காத்து நிற்கிறார்கள்.

சுற்றிலும் அரங்கேறும் காட்சிகளைக் கவனியுங்கள். காலமெல்லாம் நடத்திப் பழகிய திமுகவுக்குள்ளான உட்கட்சி கோதாவிலேயே இன்னமும் தீவிரமாக இருக்கிறார் ஸ்டாலின். விஜயகாந்திடம் எதிர்பார்க்க ஏதுமில்லை. தேமுதிகவை மரணப் படுக்கையில் தள்ளிய பெருமித சாதனைக்குப் பின், அடுத்த இலக்கு தேடிக்கொண்டிருக்கிறார் வைகோ. திருமாவளவன் திசை தேடும் குழப்பத்தில் இருக்கிறார். துண்டைக் கையில் போட்டுக்கொள்ளும் பாணியை அரசியலுக்கு அறிமுகப்படுத்திய தா.பாண்டியனும் அவர் வழிவந்த முத்தரசனும் நவீன புரட்சியைப் பவ்ய உடல்மொழி மூலம் வெளிப்படுத்தும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.



ஜி.ராம கிருஷ்ணனைக் கடைசியாகப் பரபரப்பாக மருத்துவமனைகளின் வாசல்களில் பார்த்த ஞாபகம். உருப்படியான அறிக்கைகளைத் தொடர்ந்து வெளியிடுவதில் ராமதாஸ்

முன்னணியில் இருக்கிறார். ஆனால், முதல்வர் கையெழுத்திட பேனாவும் கையுமாகத் திரிந்த அன்புமணி என்று அங்கே ஒருவர் இருந்தாரே, தேர்தலுக்குப் பின் அவர் என்னவானார்? இவர்கள் எல்லோரையும் விஞ்சிவிட்டவர் தமிழக காங்கிரஸின் புதிய தலைவர் திருநாவுக்கரசர்.

“ஜெயலலிதாவின் மரணம் தொடர்பில் வெள்ளை அறிக்கையும் வேண்டாம்; கறுப் பறிக்கையும் வேண்டாம்” என்று வெள்ளை யறிக்கை கேட்டவர்களுக்கு அவர் கொடுத்த பதிலடியையும் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவ னோடு இது தொடர்பில் அவர் நடத்திவரும் குடுமிப்பிடிச் சண்டையையும் பார்த்து அதிமுக அமைச்சர்களே திகைத்து நிற்கிறார்கள்!

ஒரே ஒரு கேள்வி, எந்த அடிப்படையில் இவர்கள் எல்லாம் தங்களுக்குத் தமிழக மக்கள் நாளை மகுடம் சூட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்?



தமிழகத்தில் ஏனைய எல்லாக் கட்சிகளையும் விட அதிமுக பிரமாண்டமான இடத்தில் நிற்க இதுநாள் வரை அதன் வசம் இரு அஸ்திரங்கள் இருந்தன. ஒன்று, எம்ஜிஆர், ஜெயலலிதா இருவரும் தம் தனிப்பட்ட கவர்ச்சியை மூலதனமாக்கி உருவாக்கிய பிம்பத் தலைமை. மற்றொன்று, கடைசிக் கிராமத் துக்கும் அவர்கள் கொண்டுசென்ற கட்சி அமைப்பு. அதிமுக அதன் பிம்பத் தலைமையை இழந்திருக்கலாம்; அதன் கட்சி அமைப்பு இன்னும் உயிரோட்டத்துடன் இருக்கிறது. அதிமுகவின் எல்லா வியூகங்களை யும் மீறி திமுக இவ்வளவு காலம் வலுவோடு நிற்க கருணாநிதியின் அயராத உழைப்பும் திமுக விடம் அவர் தக்கவைத்த போராட்டக் குணமுமே மூலகாரணங்கள். அன்றைய கம்யூனிஸ்ட்டுகள் முதல் பாமக வரையிலும்கூட இந்தப் போராட் டக் குணத்தில் ஊறியிருந்தார்கள்.



ஜெயலலிதாயிஸத்தின் தாக்கமோ என்னமோ, கடந்த பத்தாண்டுகளில் திமுக உள்ளிட்ட எல்லாக் கட்சிகளுமே கொஞ்சம் கொஞ்சமாக மக்களிடமிருந்து விலகின. தொலைக்காட்சி களும் சமூக வலைதளங்களும் பெருகிவிட்ட இந்நாட்கள், அன்றாடம் ஒரு அறிக்கை, அவ்வப் போது பேட்டிகள், சூழல் நெருக்கும்போது சில போராட்டங்கள்-பொதுக்கூட்டங்கள் என்பதாக மக்கள் அரசியலைச் சுருக்கிவிட்டன.

தமிழகத்தைப் பிம்ப அரசியலிலிருந்து விடு விப்பதற்கான தருணம் இது. தமிழகத்தை ஜெய லலிதாயிஸத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்றால், எதிர்க்கட்சித் தலைவர்கள் முதலில் தாங்கள் ஜெயலலிதா அல்ல என்பதை உணர வேண்டும்; ‘உள்ளேன் ஐயா ரக’ அடையாள அரசியலிலிருந்து விடுபட்டு வீதியில் இறங்க வேண்டும்!

**– வடிவேல்**

# தடை அதை உடை

தமிழகத்தின் பாரம்பரிய கலாச்சார கொண்டாட்டங்களில் ஒன்றான ஜல்லிக்கட்டு தடை செய்யப்பட்டுள்ளது குறித்து பல சர்ச்சைகள் எழுந்துள்ளன. இந்திய விலங்கு வதைத் தடுப்புச் சட்டம் 1966 ன் சட்டப்படி, 'வன விலங்குளைக் கூண்டில் அடைத்தோ, பொது இடங்களில் வைத்தோ வித்தை காட்டக் கூடாது. அதன் படி பல விலங்குகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அவைகளை பொது இடங்களில் துன்புறுத்துவது குற்றமானது.

சுமார் பத்து வருடங்களுக்கு முன்பு வரை சிங்கம்,புலி, கரடி, குரங்கு போன்ற விலங்குகளை நாம் நம் பகுதிகளில் 'சர்க்கஸ்' மூலம் பார்த்து ரசித்து மகிழ்ந்திருக்கிறோம். ஆனால் வனவிலங்குகளின் ஆர்வலர்களின் செயல்பாடுகளால், கடந்த சில ஆண்டுகளாக இந்த சர்க்கஸ்களில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலங்குகள் இடம்பெறுவதில்லை.

2008 ம் ஆண்டு முதலாக, தமிழகத்தில் உள்ள ஜல்லிக்கட்டு நிகழ்ச்சிகளுக்கு பல்வேறு விலங்குகள் நல அமைப்பினர் தங்கள் கண்டனங்களை தெரிவித்ததோடு, பல்வேறு வழக்குகளை உயர்நீதி மன்றத்தில் தொடுத்தனர். இதை எதிர்கொள்ள "தமிழ்நாடு ஜல்லிக்கட்டு ஒழுங்குமுறை சட்டம், 2009" ஐ கொண்டுவந்தது தமிழக அரசு. ஒவ்வொரு முறையும் ஒரு சில கட்டுப்பாடுகளோடு ஜல்லிக்கட்டு நடைபெற்றன.

2011ம் ஆண்டு ஜூலை மாதம், அன்றைய காங்கிரஸ் அரசில் மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சராக இருந்த ஜெய்ராம் ரமேஷ் ஓர் உத்தரவு பிறப்பித்தார். சிங்கம், புலி, கரடி, குரங்கு போன்ற வன விலங்குளைக் கூண்டில் அடைத்தோ, பொது இடங்களில் வைத்தோ வித்தை காட்டக் கூடாது என ஏற்கனவே இருந்த பட்டியலில் "காளை" புதிதாகச் சேர்க்கப்பட்டது. மேலும் பிராணிகள் வதை சட்டம் பிரிவு 22 ன் கீழ் ஆணையும் இடப்பட்டது.

2013 ம் ஆண்டு நடைபெற்ற ஜல்லிக்கட்டில் பிராணிகள் நல வாரியம் மற்றும் சில அமைப்புகள், ஜல்லிக்கட்டு நடந்த அத்துனை இடங்களிலும் நடைபெற்ற நிகழ்சிகளை நிழற்படம் மற்றும் காணொலியில் பதிவு செய்து, காளைகளுக்கு இழைக்கப்பட்ட பல கொடுமையான காட்சிகள் குறித்த நீண்ட பதிவினை செய்தது.



மேலும் தமிழக அரசு மற்றும் ஜல்லிக்கட்டு ஏற்பாட்டாளர்கள் கொடுத்த

வாக்குறுதிகள் எவ்வாறெல்லாம் மீறப்பட்டன என்பதை ஆதாரபூர்வமாக நீதிமன்றத்தில் நிரூபித்தனர். இதையடுத்து உச்சநீதிமன்றம் மே மாதம் 7 ம் தேதி, 2014ம் ஆண்டு 'ஜல்லிக்கட்டை' தடை செய்தது.

மேலும் தமிழக அரசின் "தமிழ்நாடு ஜல்லிக்கட்டு ஒழுங்குமுறை சட்டம், 2009" சட்டத்தை நீக்கியது. இது குறித்து காங்கிரஸ் கட்சியை சேர்ந்த ஜெயராம் ரமேஷ் 'காட்டு மிராண்டி தனமான' இந்த வழக்கம் முடிவுக்கு வந்தது குறித்து மகிழ்ச்சி என்று அறிவித்தது குறிப்பிடத்தக்கது. இதிலும் அரசியல் செய்ய நினைத்த காங்கிரஸ் அரசு இந்த வழக்கின் கடைசி தருணத்தில் 'காளைகளை' பட்டியலிலிருந்து நீக்குவதாக சொன்ன போது, நீதிமன்றம் கடுமையாக அரசை கண்டித்ததோடு, இனி இது குறித்து விலங்குகள் நல வாரியத்தை கலந்தாலோசித்தே இது போன்ற மனுக்களை தாக்கல் செய்யவேண்டும் என்று கண்டிப்புடன் கூறியது.

மேலும் தமிழக அரசின் இந்த சட்டம் விலங்குகளின் நலன் குறித்து உருவாக்கப்படவில்லை என்றும் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை நடத்துபவர்கள் மற்றும் பார்வையாளர்களின் நலனை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டது.

மேலும் பிராணிகள் நலன் குறித்த ஒவ்வொரு விவகாரத்தையும் பிராணிகள் நல வாரியம் முன்னின்று, அரசுக்கு தகுந்த அறிவுரைகளை வழங்க வேண்டும் என்றும், இந்திய விலங்குவதைத் தடுப்புச் சட்டத்தை சீரிய வகையில் விரைவாக செயல்படுத்த அந்த வாரியம் முயற்சிக்க வேண்டும் என்றும் மத்திய அரசு அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டது. மேலும் இந்தியா முழுவதும் இந்த உத்தரவை அமல்படுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

பிராணிகளுக்கு எந்த தொந்தரவும் இல்லாமல் ஜல்லிக்கட்டை நடத்துவதாக உறுதி கூறிய ஏற்பாட்டாளர்கள் அதை மீறியதாலும், கட்டுப்பாடுகளை செயல்படுத்துவோம் என்று உத்தரவாதம் கொடுத்த தமிழக அரசு செய்ய தவறியதாலும், அந்த விதி மீறல்களை ஆதாரபூர்வமாக நிரூபித்த காரணத்தினாலும் தான் இந்த பிரச்சினை எழுந்தது என்பதை நாம் உணர வேண்டும்.

இந்த சூழ்நிலையில், தமிழகத்தை சார்ந்த பல்வேறு அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் ஜல்லிக்கட்டை நடத்த வேண்டும் என்று அழுத்தம் கொடுத்தாலும், சட்ட ரீதியான அமைப்பான பிராணிகள் நல வாரியம், காளையை பட்டியலில் இருந்து நீக்குவதற்கு ஒப்புதல் அளிக்க மறுக்கிறது. தொடர்ந்து மத்திய அரசு அந்த அமைப்பினருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறது. மேலும் அந்த வாரியத்தின் ஒப்புதல் இல்லாமல் நீதிமன்றம் அரசின் கோரிக்கையை ஏற்காது என்பதை தெளிவாக்கியிருக்கிறது.

சட்ட திருத்தம் கொண்டு வரலாம் என்றாலும், சட்ட ரீதியான விலங்குகள் நல அமைப்பினரின் ஆலோசனை மற்றும் ஒப்புதல் பெற்றே கொண்டு வர முடியும் என்பதையும், ஒரு வேளை அதை செய்தாலும் ஜல்லிக்கட்டு தடைக்கு முக்கிய காரணமான காங்கிரஸ் கட்சியினர் மாநிலங்களைவையில் அந்த மசோதாவை நிறைவேற்ற முடியாது செய்வார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

அவசர சட்டம் கொண்டு வந்தாலும் அது ஒரு தற்காலிக ஏற்பாடாக மட்டுமே இருக்கும் என்பதும், பாராளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சி இதை எதிர்க்கும் என்பதும், மாநிலங்களவையில் இதை நிறைவேற்ற காங்கிரஸ் மறுக்கும். மேலும், அவசர சட்டம் என்பது 'ஜனநாயக விரோதம்' என்று காங்கிரஸ், தி.மு.க, பாமக, ம.தி.மு.க போன்ற கட்சிகள் அனைத்தும் தொடர்ந்து ஒன்றரை ஆண்டுகளாக சொல்லிவருவதும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று.

ஆக, ஜல்லிக்கட்டை தடை செய்வதற்கு சட்ட ரீதியாக வழி வகை செய்ததோடு, அதை மீண்டும் அரங்கேற்ற அரசியல் ரீதியாக பல்வேறு முட்டுக்கட்டைகளை காங்கிரஸ் கட்சி உருவாக்கியுள்ளது குறித்து மற்ற கட்சிகள் கேள்விகள் எழுப்பாதது ஏன்? காங்கிரஸ் கட்சி ஏன் இப்படி ஒரு சூழ்நிலையை உருவாக்கியது? நம் கலாசாரத்தை சீர்குலைக்க வேண்டும் என்ற எண்ணத்திலா? பண்பாட்டை தூக்கி எறிய வேண்டும் என்ற முனைப்பு ஏன் காங்கிரஸ் கட்சிக்கு வந்தது? என்ற கேள்விகள் மக்கள் முன் வைக்கப்பட வேண்டும்.பாரதத்தின் பண்பாட்டை, கலாசாரத்தை ஒழிக்க காங்கிரஸ் ஏன் முனைந்தது? முனைகிறது? **காலம் பதில் சொல்லும். காத்திருப்போம்.**

– ஆர். ஜெயா



# நிகழ் தாண்டவம்

நிலம்
விளைச்சல்
தராமல் காய்கிறது ...

மழை
கடமையை
செய்ய மறுக்கிறது ...

காற்று
தன்னை தூய்மைப்படுத்த
துடிக்கிறது

வெப்பம்
அடங்காமல் கணலாய்
எரிகிறது...

ஆகாயம்
பச்சோந்தியாய்
நிறம் மாறுகிறது....

மனிதன் மீது
பஞ்சபூதம்
யுத்தம் செய்ய
துவங்கிவிட்டது...

அரசுகள்
சாமானியர்களுக்கு
திருவோடு
கொடுத்துவிட்டது...

இறை விளையாட்டில்
குறையில்லாமல்
தினசரிகள் - இனி
இயங்காது -?...

மனிதா
காலம் உணர்த்தும்
எச்சரிக்கை - இது...

இனியும்
இன்னல்கள்
இடஞ்சல்கள்
எண்ணி
துவண்டு விடாதே...

பிறப்பு
ஒரு அஃகிரினை
வீருகொண்டு எழு
சரித்திரம்
சகாப்தமாகட்டும்...

- கவிஞர் **நிவேதிதா**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. A. Mouriyan,

# பலன் பெற்றோர் பாராட்டுகிறார்கள்!



**இடுப்பு வலி** நான் கடந்த 2,3 ஆண்டுகளாக இடுப்பு வலியால் அவதிப்பட்டு வந்தேன். தாங்க முடியாத இடுப்பு வலியால் பாத்ரூமில் கூட உட்கார்ந்து எழ முடியாது. விண், விண் என்று வலி இருக்கும் எங்கும் போகமுடியாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தேன். ஸ்கேன் எடுத்து பார்த்ததில் இடுப்பு எலும்பு தேய்ந்து விட்டது என்று சொன்னார். அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றும் அதற்கு 3 லட்சம் செலவாகும் என்றும் சொன்னார்கள். அதன்பிறகு டி.வி. மற்றும், புத்தகத்தின் மூலம் விளம்பரத்தைப் பார்த்தேன். ரப்பானி வைத்தியசாலாவில் ஒரு ஆண்டாக மருந்து சாப்பிட்டேன். இப்பொழுது அறுவை சிகிச்சை இல்லாமல் 73 வயதிலேயே எனக்கு இடுப்பு வலி குணமாகிவிட்டது. தினமும் அரைமணி நேரம் நடக்கிறேன். இடுப்பு வலி இல்லாமல் நன்றாக இருக்கிறேன்.

திரு. ராமச்சந்திரன், அம்பத்தூர், சென்னை.

**இடுப்பு வலி** நான் கடந்த 12 ஆண்டு காலமாக இடுப்புவலி நோயினால் அவதிப்பட்டு வந்தேன். ஆபரேஷன் செய்யச் சொன்னார்கள் செய்தாலும் 50%தான் குறையும் என்று சொன்னார்கள். பிறகு டி.வி.யின் மூலம், புத்தகத்தின் மூலம் விளம்பரத்தைப் பார்த்தேன். நேரில் வந்து ரப்பானி வைத்தியசாலாவில் சிகிச்சைப் பெற்றேன். இப்போது எந்த வேதனையும் இல்லை. நல்லமுறையில் இருக்கிறேன்.



திருமதி. கே.வி. காந்தி, அம்பத்தூர்

**பக்கவாதம்** நான் கடந்த 7 ஆண்டுகளாக பக்கவாதத்தால் அவதிப்பட்டு வந்தேன். படுத்த படுக்கையாக இருந்தேன். என்னால் பேசக்கூட முடியாது. மும்பையில் எல்லா பெரிய மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்றும் பயன் இல்லை. பிறகு புத்தகத்தின் மூலம், டி.வி.யின் மூலம் விளம்பரத்தை பார்த்து இங்கு மருந்து சாப்பிட ஆரம்பித்தேன். ஆறு மாதத்திலேயே என்னால் நடக்க முடிகிறது. இப்பொழுது என்னால் பழைய மாதிரி எல்லா வேலைகளையும் செய்ய முடிகிறது. எல்லா இடங்களுக்கும் தனியாக நடந்து செல்கிறேன். பேச்சும் தெளிவாகி வந்து விட்டது. இப்போது எந்த குறையும் இல்லை.



திரு. கங்காராம் மும்பை -88

**கை, கால் வாதம், முளை வளர்ச்சிக்குறைவு, மூலம், நரம்புத்தளர்ச்சி, பாலினகுறைபாடு, யானைக்கால் வியாதி, காக்காய் வலிப்பு போன்ற சகல வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.**

தென்னிந்தியாவின் புகழ்பெற்ற யுனானி மருத்துவர்

## டாக்டர் ஹக்கீம் S.A.சையத் சத்தார் ரப்பானி வைத்யசாலா

புது எண்.139, ப.எண். 65, டாக்டர் பெசன்ட்ரோடு, மீர்சாகிப்பேட்டை மார்க்கெட் அருகில்,
இராயப்பேட்டை, சென்னை -600 014. போன்: 28476969, 28470874,

பார்க்கும் நேரம்: காலை 9 மணி முதல் 2 வரை. ஞாயிறு விடுமுறை



CAPTAIN TV — திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.30 முதல் 9.00 வரை

V — வேந்தர் காலை 10.30 முதல் 11.00 வரை

WIN TV — தினமும் மாலை 5.00 மணிக்கு

தமிழன் — திங்கள் முதல் வெள்ளி வரை - காலை 9.30 மணிக்கும், மாலை -6 மணிக்கும், புதன் மற்றும் வியாழன் - இரவு 11.00 மணிக்கு மற்றும் சனி- மாலை 5மணிக்கும்

MEGA TV — திங்கள் முதல் சனி வரை காலை 9.00 முதல் 9.30 வரை

மாதந்தோறும் டாக்டர் சையத் சத்தாரின் யுனானி மருத்துவமாத இதழ் கடைகளில் கேட்டு வாங்குங்கள்.

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month




பனகல் பார்க் எதிரில், தி.நகர், சென்னை - 600 017. Phone : 2434 4115, 4260 4567, Fax : 044 - 24343062 Email : inquiry@nalli.ocm Website : www.nalli.com

சென்னை · பெங்களூரு · கோயம்புத்தூர் · டெல்லி · ஹைதராபாத் · காஞ்சிபுரம் · மதுரை · மும்பை · திருச்சி · திருநெல்வேலி · சிங்கப்பூர் · USA